₹100/-

2 - 2

ஞானகுரு

# மகிழ்ச்சி

பிப்ரவரி 2023

எஸ்.கே.முருகன்

https://gyanaguru.com/shop/



## தண்ணீராக மாறுங்கள்...

# கவித்துவம்



நான் செய்வதை
ஒரு குழந்தை பார்க்கும்போது
பதற்றமடைகிறேன்
என்று ஒரு நாள் கண்டுபிடித்தேன்.
ஒரு குழந்தை பார்க்கும்போது
அசவுகர்யம் அடைகிற எதையும்
நாம் செய்யக்கூடாது என்று
இன்னொரு நாள் கண்டுபிடித்தேன்.
அவ்வளவுதான் விஷயம்
அவ்வளவுதான் ஞானம்.

– போகன்

www.gyanaguru.com

# தண்ணீராக மாறுங்கள்...

பிரபல சினிமா நடிகரும், கராத்தே வீரருமான புரூஸ்லியிடம் பத்திரிகையாளர்கள், 'நீங்கள் எத்தனையோ முறை படப்பிடிப்புகளில் அடிபட்டு படுகாயம் அடைந்திருக்கிறீர்கள். எலும்புகள் உடைந்திருக்கின்றன. கடுமையாக பயிற்சிகளை எல்லாம் செய்கிறீர்கள், நிஜமாகவே அடி வாங்குகிறீர்கள், அடி கொடுக்கிறீர்கள். இவற்றை எல்லாம் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு இரும்பு போன்ற உடலை எப்படி உருவாக்கினீர்கள்?' என கேள்வி கேட்டார்கள்.

அதற்கு அவர், 'என் உடலை இரும்பாக நான் வைத்திருக்கவில்லை. தண்ணீராக மாற்றியிருக்கிறேன். ஊற்றப்படும் பாத்திரத்துக்கு ஏற்ப மாறிக்கொண்டு புதுப்புது வடிவம் எடுக்கும் தண்ணீராக என் உடல் இருப்பதாலே, எதையும் தாங்கிக்கொள்ள முடிகிறது' என்றார்.

ஆம், தண்ணீர் அத்தகைய மகத்துவமானது. ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை தண்ணீரை பார்த்துத்தான் கற்றுக்கொள்ள வேண்டும்.

எல்லா இடங்களிலும் நுழைந்துவிடும் தண்ணீரை தொட்டுப் பார்க்கும்போது சாதாரணமாக, பலவீனமாக, மென்மையாகத் தெரியும். ஆனால் அதுவே பாறைக்குள் கசிந்து, நுழைந்து, பனியாகஉறைந்து பின்னர் விரிவடையும்போது, அந்த பாறையை இரண்டாகப் பிளந்துவிடுகிறது.

வெப்பம் வந்தால் ஆவியாகி, குளிர் வந்தால் பனியாகி தண்ணீர் தன்னை மாற்றிக்கொள்ளும். தண்ணீர் ஆவியாகி காணாமல் போய்விட்டது என்று நினைத்தால், அதுவே பெரு மழையாகி மீண்டும் வந்து சேர்ந்துவிடும். சூழலுக்கு ஏற்ப எப்படியெல்லாம் மாறிக்கொள்ள வேண்டும் என்பதை தண்ணீர் அறிந்திருக்கிறது. காலநிலை மாற்றத்தை அப்படியே ஏற்றுக்கொள்கிறது. அதனாலே காலத்தையும் சூழலையும் கடந்து பெருவாழ்வு வாழ்கிறது.

தண்ணீர் பாய்ந்துவரும்போது ஒரு மாபெரும் மலை குறுக்கே நின்றால், அதனை தண்ணீர் எதிர்த்து நின்று உடைப்பதில்லை. மாறாக, அதனை தழுவிக்கொண்டு பாய்ந்து ஓடி, அந்த மலையை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்துவிடுகிறது. அதனாலே, தண்ணீருக்கு முன்பு எந்த மலையும் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. பாய்ந்துவரும் வெள்ளத்தை யாராலும் கட்டுப்படுத்த முடிவதில்லை. ஒரு பக்கம் அடைத்துவைத்தால், மறுபக்கம் தனக்கென்று ஒரு புதிய பாதையை உருவாக்கிக் கொள்ளும். எத்தனை அழுக்குகளை சுமந்தாலும், நதி தூய்மையாகவே பாய்கிறது.

அத்தகைய தண்ணீரால் உருவானது இந்த உலகம். தண்ணீரால் உருவானது உயிர், தண்ணீரால் உருவானது உடல். தண்ணீரில் இருந்தே உணவும் உருவாகிறது.

எனவே தண்ணீரை பார்த்து பாடம் கற்றுக்கொள்வோம். சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்றுக்கொள்வோம். எதிர்ப்புகளையும் ஏற்றுக்கொண்டு, புதிய பாதையில் நடை போடுவோம்.

வாழ்க்கையில் துன்பம், துயரம் வரும் நேரங்களில் தண்ணீரை நினைத்துப் பார்ப்போம். தண்ணீர் எத்தனை அழுக்குகளை சுமக்கிறது, எத்தனை தடைகளைத் தாண்டுகிறது, எத்தனை பேர் தாகத்தைத் தீர்க்கிறது..?

நாமும் தண்ணீராய் மாறுவோம்... அதுவே மகிழ்ச்சி.

- ஆசிரியர்

www.gyanaguru.com



www.gyanaguru.com



# எல்லோருக்கும் மகிழ்ச்சி சாத்தியமே..!

உலகில் படைக்கப்பட்டுள்ள எந்த உயிரினமும் சிரித்து, மகிழ்ச்சியாக வாழ்வது இல்லை. அப்படியிருக்கும்போது, மனிதன் மட்டும் மகிழ்ச்சியாக வாழ முடியுமா என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.

அதாவது, இந்த உலகிலுள்ள மற்ற உயிரினங்களையும் போலவே, மனித குலமும் உயிர் வாழ்வதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்குமே முதன்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளது, எனவே, மகிழ்ச்சியாக வாழ்வது மனிதனின் மரபணுக்களிலேயே இல்லை என்கிறார்கள்.

இது ஒரு வகையில் உண்மையே. ஏனென்றால், மனிதனின் திருப்திக்கான மனநிறைவு நிலையானது அல்ல. உதாரணத்திற்கு குகையில் வாழ்ந்த மனிதன், அதனையே போதும் என்று நினைத்திருக்கலாம். பழங்களை உண்பதும், விலங்குகளை வேட்டையாடி தின்பதை மட்டுமே உணவுப் பழக்கமாக வைத்திருக்கலாம். சைக்கிள் மட்டுமே பயணத் துக்குப் போதும் என அடுத்தகட்ட ஆய்வை நிறுத்தியிருக்கலாம். வெளிச்சத்துக்கு மெழுகு வர்த்தி போதும் என்று திருப்தி அடைந்திருக்கலாம்.

www.gyanaguru.com

மழையை பெய்ய வைக்க மனிதனால் முடியாது. நேரத்தை நிறுத்துவதற்கு மனிதனால் முடியாது. புயலை தடுக்க முடியாது. ஆனால், இவற்றுக்கு எல்லாம் கவலைப்பட மட்டும் மனிதனால் முடிகிறது.



## மந்திரச் சொல்

ஆனால், மனிதனுக்கு உயிர் வாழ்தலில் இருக்கும் பயம், அச்சம் போன்றவை அப்படி நிம்மதியாக வாழ்வதற்கு இடம் கொடுப்பதில்லை. எனவே, நிலையான நிம்மதியைத் தேடி அடுத்தடுத்த நகர்வுகளை செய்துகொண்டே இருக்கிறான்.

மண் குடிசையில் இருப்பதைவிட, காங்கிரீட் வீடு கட்டினால் புயல், மழைக்கு பாதுகாப்பு என்று கட்டுகிறான். வில், அம்பு வைத்திருப்பதை விட துப்பாக்கி அதிகம் பாதுகாப்பு என்று நம்புகிறான். இப்படி அடுத்தடுத்த மாற்றத்தை நோக்கி நகர்ந்துகொண்டே இருப்பதால், இருப்பதைக் கொண்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் அடையும் வாய்ப்பை இழந்துவிடுகிறான்.

தன்னிடம் இல்லாத ஒன்று பிறரிடம் இருப்பதை பார்க்கும்போது மனிதனின் மனதில் பெரும் குறையும், அதனை சரிக்கட்டுவதற்கு தவறான எண்ணங்களும் தலை தூக்குகின்றன. பேராசை, பிறர் மீது குற்றம் சொல்வது, குறை கண்டுபிடிப்பது, எதிர்மறை எண்ணங்கள், சாத்தியமில்லாத ஆசைகளை வளர்ப்பது, பொறாமை, காழ்ப்புணர்ச்சி போன்றவற்றை வளர்த்துக் கொள்கிறான்.

**நமது தேவைக்குத் தேடுவது ஆசை, பிறர் மதிக்க வேண்டுமென தேடுவது பேராசை.**

மேலும், மனிதனால் கட்டுப்படுத்தவே முடியாத விஷயங்களை நினைத்தும் கவலைப்படுகிறான். மழையை பெய்ய வைக்க மனிதனால் முடியாது. நேரத்தை நிறுத்துவதற்கு மனிதனால் முடியாது. புயலை தடுக்க முடியாது. ஆனால், இவற்றுக்கு எல்லாம் கவலைப்பட மட்டும் மனிதனால் முடிகிறது. எனவே, மனிதனால் மகிழ்ச்சியாகவோ திருப்தியாகவோ வாழ முடியாதது நமது மரபணுவில் கலந்துள்ளது என்பதும் உண்மையே. எனவே, நான் 100 சதவிகிதம் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று யாராலும் எல்லா நேரத்திலும் சொல்ல முடியாது. அது சாத்தியமும் இல்லை. அதே நேரம், இதனை சாத்தியமாக்கும் வல்லமை மனிதனுக்கு உண்டு என்பதும் நிஜம்.

எப்படி தெரியுமா..?

மற்ற எந்த உயிரினத்திடமும் இல்லாத ஒரு தனித்தன்மை மனிதனிடம் உள்ளது. அது, பகுத்தறிவு. மேலும், ஆழ் மனதை அறிந்துகொள்ளும் சக்தி மனிதனிடம் உள்ளது. ஆழ்மனதை தான் விரும்பும் வகையில் செயல்படவைக்கும் சாத்தியக் கூறுகளும் மனிதனிடம் உள்ளது.

'இன்று ஒரு நாள் முழுவதும் நான் 100 முறையாவது மகிழ்ச்சி அடைய வேண்டும்' என்று ஆழ்மனதில் சங்கல்பம் எடுத்துக் கொண்டால், அப்படி மகிழ்ச்சி அடைய ஒவ்வொரு மனிதனாலும் முடியும்.

ஆம், வயிறு நிரம்ப சாப்பிட்டது மகிழ்ச்சியாக இருக்கிறது. சரியான நேரத்திற்கு அலுவலகம் அடைந்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் அணிந்திருக்கும் ஆடை எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்று எல்லா செயல்களிலும் மகிழ்ச்சியைக் காண முடியும். இப்படிப்பட்ட மகிழ்ச்சியை தினமும், வாழ்க்கை முழுவதும் அனுபவிக்கவும் முடியும். எனவே, எல்லோராலும் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும் என்பதுவே உண்மை. அதற்கு தேவை, மகிழ்ச்சியை விரும்பும் மனது மட்டும்தான். மரபணுவை நினைத்து கவலை எதற்கு... அதை மாற்ற முடியும் என்பதுதான் மனிதனின் ஆகப்பெரும் மகிழ்ச்சி.

# எல்லாம் இன்பமயம்..!



“நான் தினமும் காலையில் எழுகிறேன், வேலைக்குப் போகிறேன், திரும்பிவந்து குடும்பத்தினருடன் கொஞ்சநேரம் செலவிடுகிறேன். இரவு தூங்கிவிடுகிறேன். இதற்கிடையில் மகிழ்ச்சி அடைவதற்கு எனக்கு வாய்ப்பே இல்லை. எனக்கு எப்போது, எப்படி கிடைக்கும் மகிழ்ச்சி?” என்று ஞானகுருவிடம் கேட்டார் மகேந்திரன்.

“மகிழ்ச்சி உனக்குள் ஒளிந்திருக்கிறது. அதை நீ கண்டுபிடிக்க முயற்சிக்கவில்லை என்பதால் உனக்கு அனுபவிக்க முடியவில்லை...” என்றார் ஞானகுரு.

“சும்மா எதையாவது சொல்லாதீர்கள்... இன்று நான் செய்த பணிகளுக்கு இடையில் நான் எப்படி மகிழ்ச்சியை கண்டு பிடிக்காமல் கோட்டை விட்டேன்” சுர்ரென கோபமாகவே கேட்டார் மகேந்திரன்.

”உன்னால் தினமும் காலையில் எழ முடிகிறது, அலுவலகம் செல்ல முடிகிறது, குடும்பத்தினருடன் கொஞ்ச நேரம் செலவிட முடிகிறது, இரவு தூங்க முடிகிறது, மீண்டும் விழிக்க முடிகிறது. இவை எல்லாமே மகிழ்ச்சி இல்லையா..?”

“இவை எல்லாம் சாதாரண செயல் தானே, இதில் மகிழ்ச்சி அடைவதற்கு என்ன இருக்கிறது..?”

”நீ செய்வதை சாதாரண செயலாக நினைப்பதும், மகிழ்ச்சி அடைவதும் உன் கைகளில்தான் இருக்கிறது. ஆம், சாதாரண செயலை எப்படி மகிழ்ச்சியாக அனுபவிப்பது என்று பார்க்கலாம்.

காலையில் கண் விழித்து எழ முடிகிறது அல்லவா..? அது எத்தனை பெரிய பாக்கியம் தெரியுமா? எத்தனையோ பேருக்கு தூக்கத்திலேயே உயிர் பிரிந்து விடுகிறது. எத்தனையோ பேருக்கு ஏதேனும் நோய் காரணமாக காலையில் படுக்கையில் இருந்து எழ முடிவதில்லை. இவையெல்லாம் தாண்டி நீ காலையில் எழ முடிவதை ஒரு மனநிறைவாகப் பார்த்து மகிழ்ச்சி அடையலாம். உணவு சாப்பிட்டதும் பசி மறைகிறது. மனம் நிறைகிறது. அந்த மன நிறைவை மகிழ்ச்சியாகக் கொண்டாடலாம். ஆஹா, இன்று ஒரு நல்ல உணவு சாப்பிட முடிந்தது என்று மகிழ்ச்சி அடையலாம். இப்படி நீ ஒவ்வொரு விஷயத்திலும் மகிழ்ச்சியைக் கண்டுபிடிக்க முடியும். அதனை அனுபவிக்கவும் முடியும்.

மகிழ்ச்சி என்பது நீ நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருக்கும் ஒரு பரிசாக அல்லது ஏதேனும் ஒரு பொருளில், அங்கீகாரத்தில் இருக்கிறது என்று நினைக்காதே. பார்க்கும் இடத்தில் எல்லாம் மகிழ்ச்சி நிரம்பியிருப்பதாக எடுத்துக்கொள். இப்படி உன் வாழ்க்கையை உற்று நோக்கினால் ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை சின்னச் சின்ன விஷயங்களில் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைய முடியும்...”

”ஆனால், அப்படி சட்டென எதையும் மகிழ்ச்சியாகப் பார்க்க முடியவில்லையே, இட்லியை பார்த்ததுமே,இன்றைக்கும் இட்லியா என்று எதிர்மறை சிந்தனையே வருகிறதே..?”

”மனம் என்பது களிமண் போன்றது. அதனை உன் இஷ்டத்துக்கு நீயே வடிவமைக்க முடியும். அதாவது வாழ்க்கை துன்பமயமானதாகவும் பார்க்க முடியும். காலையில் வழக்கத்தைவிட தாமதமாக எழுந்துவிட்டோமே, அச்சச்சோ பற்பசை தீர்ந்துவிட்டதே, சட்னிக்கு காரம் போதவில்லையே என்று மனதை துன்பமயமாக மாற்றிக்கொள்வதற்கு முடிவு செய்தால், எப்போதும் துன்பமே கிடைக்கும். ஆகவே, முடிவு செய்யவேண்டியது நீ மட்டும்தான்... ஒரு சிற்பத்தை கலையாகப் பார்ப்பதும், கடவுளாகப் பார்ப்பதும் உன் மனசுதான். எனவே, மகிழ்ச்சி அடைவதை ஒரு பயிற்சியாக தினமும் செய்து வா. தினமும் மகிழ்ச்சி அடைவதை தொடர் பயிற்சியாக செய்து வந்தால் உலகமே இன்பமயமாகத் தெரியும்...” என்றார்.

ஆம், எல்லாம் இன்பமயம்.



www.gyanaguru.com

# சிம்பிள் லைஃப் ஸ்டைல்..!

திருவோடு வைத்திருப்பது சந்நியாசிக்கு ஆடம்பரம் என்று சொல்வார்கள். ஏன் தெரியுமா..? அந்த திருவோட்டை பாதுகாப்பதற்கு ஒரு தோள் பை தேவைப்படும். அடுத்து தண்ணீர் கேன், சாப்பிட ஸ்பூன், செருப்பு, தீப்பெட்டி என்று தேவை அதிகரித்துக்கொண்டே போகும். பின்னர் அந்த சந்நியாசி மீண்டும் குடும்பஸ்தன் ஆகிவிடுவார்.

அந்த வகையில் இப்போது, தேவையில்லாத பொருட்களை வாங்கிக் குவிப்பதையே லைஃப் ஸ்டைல் என்று மக்கள் நினைக்கிறார்கள். பிறர் பார்த்து பிரமிப்பதற்காக பிரமாண்டமான பங்களா, வாசலில் இரண்டு கார்கள், காவலுக்கு வேலைக்காரர்கள், நாலைந்து காவல் நாய்கள் என்று வாழ்வதே சிறந்த லைஃப் ஸ்டைல் என்ற லட்சியத்துடன் வாழ்கிறார்கள்.

‘தினமும் மட்டனும், சிக்கனும் இருக்கணும், எல்லா இடத்துக்கும் காரிலேயே போய் பழகிட்டேன்... ஞாயிற்றுக்கிழமைன்னா ஹோட்டல் சாப்பாடு...



# சிம்பிள் லைஃப் ஸ்டைல்..!

**மந்திரச் சொல்**

**ஒரு பிரச்னைக்கு தீர்வு காண முடிய வில்லை என்றால், அதை ஏற்றுக் கொள்ளுங் கள்.**

ஹோம் மேடு சாக்லேட்... மாதம் ஒரு ஷாப்பிங்' என்பது போன்ற வாழ்க்கை முறை அலுப்பு தட்டினாலும், இதை மாற்றிக்கொள்ள பலரும் விரும்புவதில்லை. இதையே தங்களுடைய லைஃப் ஸ்டைல் என்று பலருக்கும் காட்டிக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். பிறருக்காக வாழக்கூடிய இந்த லைஃப் ஸ்டைல் ஒருபோதும் சந்தோஷம் கொடுப்பதில்லை.

ஆம், குறைந்த பொருட்களுடன் வாழ்வதுவே மகிழ்ச்சியும் நிம்மதியும் கொடுக்கும்., எத்தனை குறைவான பொருட்கள் உங்களிடம் இருக்கிறதோ, அத்தனை அதிக நிம்மதி கிடைக்கும். இந்த வழியில், மினிமலிசம் எனப்படும் வாழ்வியலை ஐரோப்பா அமெரிக்கா போன்ற நாடுகளில் இப்போது பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

மினிமலிசம் என்றால் ஒருவன் தனக்கு தேவையான குறைவான பொருட்களுடன் வாழ்க்கை நடத்துவது ஆகும். உதாரணமாக ஏழு செட் ஆடைகள் போதும் என்று முடிவு எடுப்பது. அதேபோல் ஒரு பெல்ட் ஒரு செருப்பு ஒரு ஷூ, ஒரு பிளேட், ஒரு ஸ்பூன் என்று பட்டியல் போடுகிறார்கள்.

வீட்டில் தேவையில்லாத பொருட்கள் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை அறிய ஒரு வழிமுறை பரிந்துரை செய்யப்படுகிறது.

அதாவது உங்கள் வீட்டில் இருக்கும் அனைத்து பொருட்களையும் ஒரு தனி அறையில் அடைத்துவிட வேண்டும். இயல்பான வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை மட்டும் அந்த அறையில் இருந்து எடுத்து, நமது அன்றாட பழக்கத்துக்குரிய அறைக்கு மாற்றிக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக காலையில் பல் விளக்க தேவையான பேஸ்ட், பிரஷ், சோப்பு போன்றவற்றை அந்த அறையில் இருந்து எடுத்துக் கொள்ளலாம். சமைக்கத் தொடங்கும்போது, தேவையான பாத்திரங்களை மட்டும் எடுக்க வேண்டும். இரவு உறங்கும் போது அதற்கு தேவையான தலகாணி, போர்வை என, ஒரு மாதம் எடுத்துக்கொண்டே இருக்கலாம்.

ஒரு மாதம் முடிந்த பிறகு நீங்கள் வெளியில் எடுத்து வைத்த பொருட்கள் மட்டுமே உங்கள் வாழ்வியலுக்குப் போதுமானது. ஒரு மாதம் எடுத்த பிறகும் அந்த அறையில் எஞ்சியிருக்கும் பொருட்கள், உங்களுக்குத் தேவை இல்லாத அதாவது அத்தியாவசியம் இல்லாத பொருட்களே.

இப்படி நாம் சேர்த்திருக்கும் தேவையில்லாத பொருட்களை விட்டு விலகுவதே

> **ஒரு பால் குக்கரை கழுவ சோம்பேறித்தனப்பட்டு, அடுத்ததை பயன்படுத்துவார்கள். இதனால் சமையல் மேடையில் ஒரே நேரத்தில் மூன்று பால் குக்கருமே இருக்கும் நிலை உருவாகும். இது, தேவையில்லாத கூடுதல் சுமை.**



மினிமலிசம் எனும் வாழ்வியல் கொள்கை.

இன்னும் எளிதாக சொல்வது என்றால், வீட்டில் இருக்கும் ஏதேனும் ஒரு பொருளை மூன்று மாதங்களுக்குள் ஒரு முறையேனும் நீங்கள் பயன்படுத்தவில்லை என்றால், அந்த பொருள் உங்கள் அத்தியாவசியப் பட்டியலில் வராது. உதாரணத்துக்கு மடக்கி வைக்கும் ஏணி ஒன்று வாங்கி வைத்திருப்பீர்கள். வீட்டில் ஒட்டடை அடிப்பதற்கு, பல்பு மாட்டுவதற்கு அது தேவைப்படலாம். ஆனால், வருடத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே பயன்படக்கூடிய ஒரு பொருளை வீட்டில் அடைத்து வைப்பதற்கு அவசியம் இல்லை. தேவை ஏற்படும்போது வாடகைக்கு அல்லது அக்கம்பக்கம் இரவல் வாங்கிக்கொள்ளலாம். இவ்வளவுதான் மினிமலிசம்.

இது, தேவையில்லாத எத்தனையோ தொந்தரவுகளை குறைக்கும். உதாரணத்துக்கு வீட்டில் ஒரு பால் குக்கர் இருக்கிறது என்றால், அதையே தினமும் பயன்படுத்துவார்கள். வெவ்வேறு அளவுகளில் மூன்று பால் குக்கர் வாங்கி வைத்திருக்கிறார்கள் என்றால், ஒரு பால் குக்கரை கழுவ சோம்பேறித்தனப்பட்டு, அடுத்ததை பயன்படுத்துவார்கள். இதனால் சமையல் மேடையில் ஒரே நேரத்தில் மூன்று பால் குக்கருமே இருக்கும் நிலை உருவாகும். இது, தேவையில்லாத கூடுதல் சுமை.

நிறைய பொருட்கள் சேர்ந்துவிட்டால் நிறைய சந்தோஷம் கிடைக்கும் என்பது உண்மையல்ல, தேவையான அளவுக்கு குறைவான பொருட்கள் இருப்பதே நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும். அடிப்படைத் தேவைகளையும் அளவான பொருட்களையும் உடையவர்களே பணக்காரர்கள், அவர்களே இந்த உலகில் நிம்மதியாக வாழ தகுதி படைத்த மானுடர்கள்.

இலவசமாகக் கிடைக்கிறது என்பதற்காக மிக்ஸி வாங்கும்போது ஒரு குக்கர் கூடுதலாக வாங்கிவந்தால், அது மகிழ்ச்சி அல்ல, கிச்சனுக்கு கூடுதல் சுமை. பைக்கில் இருந்து காருக்கு மாறுவது வசதி என்பதைவிட கூடுதல் சுமை. கூடுதல் பெட்ரோல் செலவு, கார் நிறுத்துவதற்கு செட், வெளியே செல்லும்போது பார்க்கிங் கட்டணம், கார் இருப்பதாலே செல்லக்கூடிய பயணங்கள் என்று சுமை கூடிக்கொண்டே செல்லும்.

அதேநேரம், பொருட்களின் தேவைகளைக் குறைக்க குறைக்க மகிழ்ச்சி அதிகரித்துக்கொண்டே செல்லும். அனுபவித்து மகிழுங்கள்.

# வார்த்தைகளே வரம்

### ஜென்

உங்கள் காலணிகள் சரியாக பொருந்தும் போது, அதை மறந்து விடுகிறீர்கள்.

### ஓஷோ

நீ எதனுடன் போராடுகிறாயோ அதுவே தொடர்ந்து வரும். நீ போராடுவதே உனக்குக் கவர்ச்சியான விஷயமாகத் தோன்றிவிடும். பேராசையுடன்,காமத்துடன், கோபத்துடன் மோதினால் அதுவே உன் மனதை ஆக்கிரமிக்கும். எதனுடன் போராடுகிறாயோ அதன் நினைவுதான் உனக்கு எப்பொழுதும் இருக்கும்.

### மாலன்

தோற்றுப் போதல் என்பது என்ன? பணம் சம்பாதிக்க முடியாமல் போவதா? புகழ் பெற முடியாது போவதா? எண்ணிய இலக்கை அடைய முடியாது போவதா? தன் எண்ணங் களின்படி வாழ இய்லாமல் போவதா? பிறரின் அனுதாபத்திற் குள்ளாவதா? தோல்வி, தோற்றுப் போதல் என்பதே கற்பனை. எந்த இடத்தையும் அடைய அல்ல... சும்மா நடக்கவே விரும்புகிறேன் என்பவருக்கு தோல்வியும் இல்லை வெற்றியும் இல்லை. அனுபவங்கள் மட்டுமே உண்டு.

### எஸ்.ராமகிருஷ்ணன்

மனிதர்களின் கண்டுபிடிப்பில் மகத்தானது சொற்கள்.அது தானியத்தைப் போன்றது. விளைநிலத்தில் விதைக்கப்படும் போது வளர்ந்து செழிப்பதோடு இன்னொரு விதையாகவும் மாறுகிறது.சொல்லை விதையாக்குவதும் வீணாக்குவதும் நம் கையில்தான் இருக்கிறது!

### கபீர்

மன்னிப்பு என்பது வேறொன்றும் இல்லை .ஒரு மலரை நொறுக்கிய பிறகும் அது தருகின்ற நறுமணம் தான் மன்னிப்பு.

**பாலகுமாரன்**

வாழ்க்கை என்பது ரொம்பவே வேடிக்கை யானது. எது தெளிவோ, அது முட்டாள்தன மாகவும், எது முட்டாள்தனமோ, அது தெளிவாகவும் பேசப்படும்.

**புத்தர்**

எந்த ஒரு தெளிவில்லாத கேள்விக்கும், சிறந்த விடை மௌனம் மட்டும்தான். சண்டையில் ஒருவர்தான் வெல்ல முடியும். சமாதானத்தில் இருவரும் வெல்லலாம்.

**ருத்யார்ட் கப்ளிங்**

பணம், பதவி, புகழ் மீதான அதீத அக்கறை குறித்து எச்சரிக்கையாக இரு. இதை யெல்லாம் ஒரு பொருட்டாக கூட மதிக்காத ஒரு மனிதனை என்றாவது ஒரு நாள் நீ சந்திக்கலாம். அப்போது நீ எவ்வளவு ஏழ்மை யானவன் என்று தெரிந்துகொள்வாய்.

**அரவிந்தர்**

உன் மீது விழுந்த மழைத்துளியை ஆசிர்வாதமாகப் பார்ப்பதும், அசௌகர்யமாகப் பார்ப்பதும் உன் தேர்வுதான். அப்படியே காயப்படுவதும், காயப்படாமலிருப்பதும் உனது தேர்வுதான். அது உன் கையில்தான் இருக்கிறது என்பதை வாழ்க்கையில் மண்டையில் அடித்துக் கற்றுத் தருகிறது. ஆனாலும், இன்னும் சரியாகக் கற்றுக் கொள்ளாமல் இருக்கிறோம்.

**? பணம் தேடி தொழில் செய்யவே நேரம் போதவில்லை. குடும்பத்தோடு செலவிடும் நேரம் குறைகிறது. என்ன செய்வது?**

**- பி.மச்சப்பாண்டி, தேனி**

**ஞானகுரு**

பணத்தைவிட குடும்பத்தலைவன் அருகில் இருப்பதையே குடும்பத்தினர் விரும்புவார்கள். குடும்பத்திற்கு போதிய நேரம் ஒதுக்கியபிறகு, மீதமிருக்கும் நேரத்தில் பணம் செய். இதுதான் நிம்மதிக்கான வழி. இதனை மறுதலித்தால் நீ பண வேட்டை முடித்து திரும்பிவரும்போது பணம் இருக்கும், குடும்பம் இருக்காது.



**? லட்சியம் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்?**

**- எஸ்.லிங்கதுரை, சென்னை.**

**ஞானகுரு :**

லட்சியத்தின் மீது ஆசை வேண்டும், அந்த ஆசையை நிறைவேற்றும் ஆவல் வேண்டும். அந்த ஆவல் பின்னர் வெறியாக மாற வேண்டும். அந்த வெறி உடலின் ஒவ்வொரு அணுவிலும் நிரம்பியிருக்க வேண்டும். அதற்காக முயற்சியும் பயிற்சியும் பொறுமையும் வேண்டும். ஆனால், நிறைய பேர் ஆசையிலும் ஆவலிலும் நின்றுவிடுகிறார்கள். நகர்வதே இல்லை.






**? மனதை ஒருமுகப்படுத்த பயிற்சி உண்டா?**

**- எம்.தீபலஷ்மி, ராஜபாளையம்**

**ஞானகுரு :**

உனக்குப் பிடித்த செயலை ஆனந்தமாக செய்தால் மனம் ஒரு நிலையில் அப்படியே நிற்கும். நல்ல சினிமா பார்க்கும்போது இதனை உணர முடியும். எல்லா செயல்களையும் சந்தோஷமாக செய்துபார். மனதை வெற்றிகொள்ள முடியும்.

**? மெய், பொய் எது, எப்போது வெல்லும்?**

**- ஜி.முருகேசன், நாகர்கோவில்**

**ஞானகுரு :**

வெற்றிக்காக பொய்யை பலர் பயன்படுத்துகிறார்கள். வெற்றியும் பெறுகிறார்கள் ஆனால், வெற்றி, தோல்விக்கு அப்பாற்பட்டது மெய்.




**? எந்தக் காதல் அற்புதமானது?**


**- எழிலரசி, திருவண்ணாமலை**

**ஞானகுரு :**

தான் காதலிக்கும் நபர் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் காதல் அற்புதமானது. காதலிக்கும் நபரால் தனக்கு என்ன நன்மை என்று கணக்குப் பார்ப்பது அபத்தம்.



# ஞானகுரு பதில்கள்




**? குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வது ஆண்களா அல்லது பெண்களா?**

**- கே.கல்பனாதேவி, வ.உ.சி. தெரு, சூலக்கரை**

**ஞானகுரு :**

குடும்பத்துக்கு விட்டுக்கொடுக்க நினைப்பவர்கள் ஆண்கள். ஆனால், குடும்பமாகவே மாறிவிடுபவர்கள் பெண்கள்.



**? நிம்மதியாக உறங்குபவன் ஏழையா... பணக்காரனா?**

**- சி.லட்சுமி ராமசாமி, என்.ஜி.ஓ. காலனி, சாத்தூர்.**

**ஞானகுரு :**

எல்லா மனிதனுக்கும் கிடைத்திருக்கும் அற்புத வரம் உறக்கம். எத்தனை பெரிய துன்பம் இழைக்கப்பட்டிருந் தாலும், மாபெரும் கொடுமைக்கு ஆளாகியிருந்தாலும் அதனை மறக்கவைக்கும் சக்தி தூக்கத்திற்கு உண்டு. ஏழைகளுக்கு நாளையைப் பற்றிய மிகப்பெரிய கவலை கிடையாது ஏனென்றால் அவனுக்கு நாளை மற்றொரு நாள் மட்டுமே. அதனால் படுத்ததும் தூங்குகிறான். ஆனால், பணக்காரனுக்கு ஆயிரத்தெட்டு கவலைகள். அவனையும், அவனை சார்ந்தவர்களையும், அவன் பணத்தையும் பாதுகாக்கவும், பெருக்கவும் வேண்டும். அதனால் அதிகம் சிந்திக்கிறான். குறைந்த நேரம் தூங்குகிறான். தூக்கத்தில் ஆழ்ந்தபிறகு எல்லோரும் சரிசமமே. தூக்கத்திற்கு ஆண், பெண், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகள் கிடையாது.

**? ஜனத்தொகை பெருக்கத்தால் செடி, கொடி, விலங்கினங்கள் அழிகின்றன. இந்த வரிசையில் மனித இனமும் அழிந்துவிடுமா?**

**- எம்.கனகராஜ், தம்பிபட்டி**

**ஞானகுரு :**

பிறக்கும் அத்தனையும் அழியத்தான் வேண்டும். இந்த பிரபஞ்சமும் ஒரு நாள் அழிந்தே தீரும். ஆனால், அதைப் பற்றி நீ கவலைப்பட்டு எதுவும் ஆகப்போவதில்லை.





**? நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை என்று வாழ்வது நல்லதா அல்லது நாலைந்து பிள்ளைகள் பெற வேண்டுமா?**

**- கே.ராணி கந்தசாமி, தஞ்சாவூர்.**

**ஞானகுரு :**

இனப்பெருக்கம் உயிர்களின் ஜீன்களில் எழுதப்பட்டுள்ளது.. அதனால் தாய்மை, தந்தையின் அனுபவம் உணர்வதற்காக ஒரு பிள்ளையாவது பெற்றுக்கொள். இது இயற்கையின் கட்டளை.

# ஞானகுரு பதில்கள்

**?** ஆணுக்கும் பெண்ணுக்குமான மனபேதம் என்ன?

**- ஏ.மதன்குமார், எரிச்சநத்தம்.**

**ஞானகுரு :**

அன்பை கணக்கில்லாமல் வழங்குபவள் பெண். கணக்கில்லாமல் அன்பு வழங்கி, அதற்கு கணக்குப் பார்ப்பவன் ஆண். எப்போதும் பெண் தனக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்பது ஆணின் ஆசை. அடங்கிப்போகும் கணவனுக்கு ஏங்குவது பெண்ணின் குணம். ஒன்றுக்கொன்று எதிராகத் தெரிந்தாலும், இயல்பில் எல்லாம் ஒன்றுதான்.




**?** செல்போன் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்கும் மக்கள், நாளிதழ், நூல்கள் படிக்க முன்வருவதில்லையே ஏன்?

**- தி.மணிகண்டன், சாத்தூர்.**

**ஞானகுரு :**

அறிவியல் வளர்ச்சியை எவராலும் கட்டுப்படுத்த முடியாது. உன் வீட்டில் படிக்கும் பழக்கம் அதிகரிக்க வேண்டும் என்றால், பெரியவர்கள் புத்தகம் படிக்க வேண்டும். தலை செல்லும் வழியில் வாலும் நுழையும்.





**?** ஏட்டுக் கல்விக்கும் அனுபவக் கல்விக்கும் உள்ள பலம், பலவீனம் என்ன?

**- எஸ்.அமுதா, ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**ஞானகுரு :**

கல்வி முடித்ததும் வெளிநாட்டுக்குச் செல்லும் துணிச்சலும் நம்பிக்கையும் வருவது ஏட்டுக் கல்வியின் பலம். தோல்வியில் துவண்டுபோவது பலவீனம். அனுபவக் கல்வி அலட்டிக்கொள்ளாது. வெற்றியில் துள்ளாது, தோல்வியில் கலங்காது.



**?** நான் சொல்வதைக் கேட்காத மனைவியுடன் குடும்பம் நடத்தத்தான் வேண்டுமா?

**- எம்.பரந்தாமன், நெல்லை.**

**ஞானகுரு :**

வேண்டவே வேண்டாம். உடனடியாக விவாகரத்துக்கு விண்ணப்பம் செய். ஆனால் அதற்கு முன்பு ஒன்று புரிந்துகொள். ஒரு புல்லைக் கூட உன் இஷ்டத்துக்கு நேராக வளர்க்க முடியாது. ஒவ்வொரு உயிருக்கும் தனித்தன்மை உண்டு. குடும்ப வாழ்க்கையில் விட்டுக் கொடுப்பவனே வெற்றிகரமான மனிதனாக கருதப்படுவான் இதனை மனதில் வைத்து உன் முடிவை எடு.



? பசித்து சாப்பிடணுமா அல்லது ருசித்து சாப்பிடணுமா?

**- என்.ராஜ்குமார், பங்களாபுதூர்**

**ஞானகுரு :**

நாக்கிற்கு கீழ் போய்விட்டால் நரகல். எனவே எதுவாக இருந்தாலும் பசித்து சாப்பிடு. ருசியும் இருந்தால் நல்லது, இல்லையென்றாலும் அதைவிட நல்லது

? போதையில் இருந்து வெளியேற வழி இருக்கிறதா?

**- பி.சுப்பிரமணியன், கள்ளிக்குடி.**

**ஞானகுரு :**

போதையைவிட அதிக சந்தோஷம் தரக்கூடிய ஒன்றை கண்டுபிடித்துவிட்டால், போதையில் இருந்து விடுபட முடியும். அந்த சந்தோஷம் குடும்பமாக இருக்கலாம், வேலையாக இருக்கலாம் அல்லது வெற்றியாக இருக்கலாம். போதையைவிட சந்தோஷம் தரக்கூடியது எதுவென கண்டறி.. நிச்சயம் வெளியேறலாம்.






? தந்தையின் தொழில் சில வாரிசுகளுக்கு வெற்றியும் சில வாரிசுகளுக்குத் தோல்வியும் தருவது ஏன்?

**- எம்.பூமிராஜ், கடலூர்.**

**ஞானகுரு :**

பால், டீத்தூள் ஒரே அளவில் பத்து பெண்களிடம் கொடுத்து டீ போடச்சொன்னால், பத்துவிதமான ருசி கிடைக்கும். ருசி என்பது பொருட்களில் இல்லை, அதனை உருவாக்கும் கைகளில் இருக்கிறது. தொழிலும் அப்படித்தான். ஆழம் அறிந்துகொள்ளாமல் இறங்கினால் அப்பன் குதிரை என்றாலும் கீழே தள்ளத்தான் செய்யும்.

? பணம், பதவி, புகழ் – இவற்றில் எதை மனிதன் அதிகம் விரும்புகிறான்?

**- எம்.சுந்தரி முருகன், வடபழனி**

**ஞானகுரு :**

மனிதர்களின் முதல் விருப்பம், முதல் தேர்வு, முதல் ஆசை பணம். ஆசைப்பட்ட அளவுக்கு பணம் கிடைத்ததும் பதவிக்கு ஆசைப்படுகிறான். பதவி சுகத்தை அடைந்தவன், அதனால் புகழ் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறான். ஆக, பணமே பிரதானம். பணமின்றி அமையாது உலகு.





? சடங்குகள், சம்பிரதாயங்கள் எதற்கு?

**- டி.சரவணக்குமார், சூலூர்.**

**ஞானகுரு :**

பொழுதுபோக்கு இல்லாத காலத்தில் மனிதனுக்கு புத்துணர்ச்சி தருவதற்காக உருவாக்கப்பட்டவை. ஆனால் இன்று சடங்குகள் பணம் பறிக்கும் வியாபாரமாக மாறி விட்டது. இறைவனை அடைவதற்கு இந்த குறுக்குவழிகள் ஒருபோதும் பயன் தருவதில்லை.

மரங்களுக்கு இடையே உற்சாகமாக நடைபோட்டுக்கொண்டிருந்த ஞானகுருவை தடுத்து நிறுத்தினார் மகேந்திரன்.

”என்னுடைய மாமனார் இறந்துவிட்டார். அதற்கு 30ம் நாள் காரியம் செய்வதற்கு ஒன்றரை லட்சம் ரூபாய் கேட்கிறார். அதோடு பொன், மாடு தானம் தர வேண்டுமாம். இவற்றை செய்யவில்லை என்றால் என் மாமனார் நரகத்தில் துடிப்பாராம்... அவரது சாபத்தினால் எங்களுக்கும் நல்லது நடக்காதாம்... ரொம்பவே பயமுறுத்துகிறார்... நான் என்ன செய்வது” என்று கேட்டார்.

”சொர்க்கம், நரகம் என்பதை நம்புகிறாயா..?”

”உங்களுடன் பேசும்போது இல்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. ஆனால், தனியே அமர்ந்து யோசிக்கும்போது, பயமாக இருக்கிறது. பணத்துக்குப் பயந்து, இந்த காரியம் செய்யவில்லை என்றால் ஏதேனும் தடங்கல் வந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. எல்லாவற்றையும்விட, இவற்றை எல்லாம் கடைபிடித்த நம் முன்னோர்கள் என்ன முட்டாள்களா என்ற கேள்வியும் எழுகிறது...” என்றார்.





# 30ம் நாள் காரியம் இதற்காகத்தானா..?

மனிதனின் மிகப்பெரிய அச்சமே மரணம் மட்டும் தான். அதுவும், நெருங்கிய உறவினர் மரணம் அடையும் போது இந்த அச்சம் அதிர்ச்சியாக இருக்கும். குறிப்பாக, வீட்டில் யாரேனும் எதிர்பாராத நேரத்தில் மரணம் அடையும்போது, மிக நெருங்கிய உறவுகள் பயந்துவிடுவார்கள்.



”முன்னோர்கள் என்றாலே முட்டாளாக அல்லது அறிவாளியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், இறந்தவர்களுக்கு காரியம் செய்யும் பழக்கம் நம் நாட்டில் மட்டும் இருக்கிறது என்று நினைக்காதே, எல்லா நாடுகளிலும் இந்த பழக்கம் இருக்கவே செய்கிறது. ஆனால், இதன் உண்மையான அர்த்தம் வேறு” என்றார் ஞானகுரு.

”இதில் என்ன அர்த்தம் ஒளிந்திருக்கிறது..?” ஆர்வமாக கேட்டார் மகேந்திரன்.

”இறந்த மனிதருக்கு 16ம் நாள் அல்லது 30வது நாள் காரியம் முடியும் வரை அந்த வீட்டில் உறவுகள் தங்கியிருக்க வேண்டும் என்பதுதான் உண்மையான அர்த்தம். ஏனென்றால், மனிதனின் மிகப்பெரிய அச்சமே மரணம் மட்டும் தான். அதுவும், நெருங்கிய உறவினர் மரணம் அடையும்போது இந்த அச்சம் அதிர்ச்சியாக இருக்கும். குறிப்பாக, வீட்டில் யாரேனும் எதிர்பாராத நேரத்தில் மரணம் அடையும்போது, மிக நெருங்கிய உறவுகள் பயந்துவிடுவார்கள்.

அந்த பயத்தில் இருந்து உறவுகள் விடுபடவே சில நாட்கள் ஆகிவிடும். அதன்பிறகு, செத்துப்போன நபர் இல்லாமல் வாழ முடியுமா என்று எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் உருவாகும். திடீரென இப்படி நம்மை விட்டுப் போய்விட்டாரே என்ற கோபம் உருவாகும். அவர் மீதான கோபம் சமூகத்தின் மீது திரும்பும். இந்த பயம், அச்சம், கோபத்தை எல்லாம் தணிப்பதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் உறவுகள், நண்பர்கள் பக்கத்தில் சில நாட்களாவது இருப்பது நல்லது. அப்படி யாரும் ஆதரவு கொடுக்கவில்லை என்றால், அவர்கள் மன அழுத்தம் அல்லது மனப்பிறழ்வுக்கு ஆளாவதற்கு வாய்ப்பு உண்டு.

## மந்திரச் சொல்

**தவறான பாதையில் செல்லும் போது மட்டுமல்ல, சரியான பாதையிலும் சோதனைகள் வரத்தான் செய்யும்.**


இந்த காரணத்தால் தான், எல்லா நாடுகளிலும் மரணத்தைக் கொண்டாட்டமாகப் பார்க்கிறார்கள். மரணம் அடைந்தவர் உடலை நீண்ட நாட்கள் பாதுகாத்து வைப்பது, குடித்துவிட்டு ஆட்டம் போடுவது, பாட்டுப் பாடுவது, இறந்தவர் வாழ்க்கையை கதையாகப் பேசுவது, இறந்தவர் பெயரில் ஏதேனும் சடங்குகள் செய்வது போன்ற எல்லாமே, இறந்தவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தரும் முயற்சிகள்தான்.

ஒரு மரணம் என்பது குடும்பத்தை சுனாமியைப் போன்று தாக்கி புரட்டிப் போட்டுவிடும். அந்த சோக சுனாமியின் அலைகள் கொஞ்சம் கொஞ்சமாக தணிந்து, மரணம் என்பது தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்துகொள்ளும் இயல்பு நிலைக்கு அவர்கள் திரும்பும் வரை, ஆதரவு தர வேண்டும். அதற்காகவே 16 நாடகள் அல்லது 30 நாட்கள் இறந்தவர் வீட்டில் தங்கியிருந்து, காரியத்தை முடித்துவிட்டு கிளம்ப வேண்டும் என்று சொல்லி வைத்தார்கள்.

எந்த நோக்கத்திற்காக இந்த நாட்கள் உருவாக்கப்பட்டதோ, அவற்றை மறந்துவிட்டு, குறிப்பிட்ட நாளில் மட்டும் எட்டிப் பார்த்து படையல் சாப்பாட்டை சாப்பிடும் காலமாகிவிட்டது. எனவே, இப்போது நீ எந்த காரியமும் செய்ய வேண்டாம். பணமும் செலவழிக்க வேண்டாம். மரணம் அடைந்தவரின் உறவுகளுடன் கொஞ்ச நாளைக்கு தினமும் 10 நிமிடங்கள் நேரில் அல்லது போனில் பேசு... அதுதான் நீ அவர்களுக்குச் செய்யும் நிஜமான இறுதி அஞ்சலி” என்றார் ஞானகுரு.

தெளிவாகியிருந்தார் மகேந்திரன்.


கவித்துவம்
யார் கையால் நீரூற்றினாலும்
உறிஞ்சிக் கொள்கிறது
வேர்
எந்த மண்ணில் நட்டாலும்
இனிக்கவே செய்கிறது
கரும்பு.
- யுகபாரதி




























# மகிழ்ச்சிக்கு ரூ.500/-

www.gyanaguru.com













ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழுக்கு ஒவ்வொரு மாதமும் விமர்சனங்கள், பாராட்டுகள் அதிகரித்து வருவது, மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்றவற்றை பரப்புவதையே ஞானகுரு மகிழ்ச்சி இதழ் நோக்கமாகக் கொண்டுள்ளது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணைய தளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்க வில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத்தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

**GPAY : +91 72997 53999**

**GHANAGURU PUBLICATION,**

**CITY UNION BANK,**

**CURRENT ACCOUNT**

**No. : 036109000092054,**

**IFSC : CIUB0000036.**



# விஜய் சேதுபதி மீது பொறாமையா..?!

சினிமாவில் எந்த பின்புலமும் இல்லாமல் தனது கடின உழைப்பால் முன்னேறி வெற்றி பெற்ற நடிகர்களில் விஜய் சேதுபதிக்கு தனி இடம் உண்டு. இன்று விஜய் சேதுபதி தமிழ் சினிமாவின் தவிர்க்கமுடியாத நடிகர்களின் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார்.

அவரது வெற்றிக்குக் காரணம் அதிர்ஷ்டம் என்று அவர் மீது பொறாமை கொள்பவர்கள் நிறையவே உண்டு.

அதிர்ஷ்டத்தால் ஜெயித்தார் என்பது உண்மைதானா..?

விஜய குருநாத சேதுபதி காளிமுத்து என்பதுவே விஜய் சேதுபதியின் இயற்பெயர். இவர் தன் படிப்பை முடித்ததும், ஒரு ஜவுளிக் கடையில் அக்கவுன்டன்ட் ஆக பணிபுரிந்திருக்கிறார். படிக்கும் வயதிலேயே ஃபாஸ்ட் ஃபுட் மற்றும் தொலைப்பேசி பூத்தில் பகுதி நேர ஊழியராக வேலை செய்திருக்கிறார். துபாயிலும் ஒரு சில வருடங்கள் வேலை பார்த்திருக்கிறார்.

துபாயில் வேலை செய்தபோது, இன்டர்நெட் மூலமாக ஜெஸ்ஸி என்பவரை காதலித்து வந்தார். அவரையே இந்தியா திரும்பியபிறகு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சூர்யா எனும் மகன் மற்றும் ஒரு ஸ்ரீஜா எனும் மகளும் உள்ளனர். .

சினிமா அவரது ஆசையாக, லட்சியமாக இருந்தது.

www.gyanaguru.com





தான் ஒரு பெரிய நடிகர் என்ற பந்தா இல்லாமல் அனைவரிடமும் சரிசமமாக பழகும் குணம் கொண்டவர். அதனால் தானோ என்னவோ இதுவரை 8 படங்களில் கவுரவ தோற்றத்தில் நடித்து கொடுத்திருக்கிறார்.

கமல்ஹாசன் நடித்த நம்மவர்(1995) படத்தின் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் தேர்வுக்காக இவர் சென்ற போது, உயரம் குறைவாக இருப்பதை காரணம் காட்டி தேர்வு செய்யபடவில்லை. 2006-ல் சன் டிவியில் ஒளிபரப்பான 'பெண்' என்ற சீரியலில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். தயக்கமே இல்லாமல் நிறைய குறும்படங்களில் நடித்தார். குறும்படங்களின் மூலமே மணிகண்டன்,கார்த்திக் சுப்புராஜ் மற்றும் நலன் குமாரசாமி ஆகியோர் அறிமுகமானார்கள்.

திரைப்படங்களில் நாயகனாக நடிப்பதற்கு முன்பே கோகுலத்தில் சீதை, புதுப்பேட்டை, M.குமரன் S/O மகாலட்சுமி, நான் மகான் அல்ல, பலே பாண்டியா, வெண்ணிலா கபடி குழு, அஞ்சாதே, லீ, சுந்தரபாண்டியன் போன்ற படங்களில் பின்னணியில் சில காட்சிகளில் தோன்றியும் சிறுசிறு கதாபாத்திரங்களிலும் நடித்திருக்கிறார்.

2010-ஆம் ஆண்டு சீனு ராமசாமி இயக்கத்தில் வெளிவந்த 'தென்மேற்கு பருவக்காற்று' படத்தில் தான் இவருக்கு கதாநாயகனாகும் வாய்ப்பு முதன்முறையாக கிடைத்தது. நாயகனாக மட்டுமே நடிப்பேன் என்றில்லாமல் வில்லனாகவும் (பேட்ட, மாஸ்டர், விக்ரம்) வித்தியாசமான கதாபாத்திரங்களை கொண்ட படங்களிலும் (ஆரஞ்சு மிட்டாய்,சூப்பர் டீலக்ஸ், சீதக்காதி) நடித்து எந்த விதமான நாயக பிம்பத்துக் குள்ளும் சிக்காமல் இருந்து இருக்கிறார்.

தான் ஒரு பெரிய நடிகர் என்ற பந்தா இல்லாமல் அனைவரிடமும் சரிசமமாக பழகும் குணம் கொண்டவர். அதனால் தானோ என்னவோ இதுவரை 8 படங்களில் கவுரவ தோற்றத்தில் நடித்து கொடுத்திருக்கிறார். அவைகள் ஜிகர்தண்டா, கதை திரைக்கதை வசனம் இயக்கம், திருடன் போலீஸ்,கதாநாயகன், டிராபிக் ராமசாமி, இமைக்கா நொடிகள், ஆக்ஷன் மற்றும் ஓ மை கடவுளே.

சினிமாவில் அறிமுகப்படுத்திய சீனு ராமசாமி இயக்கத்தில் 4 படங்கள் (தென்மேற்கு பருவக்காற்று, இடம் பொருள் ஏவல், தர்மதுரை, மாமனிதன்) நடித்திருக்கிறார். ஹிட் படம் கொடுத்த கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் 4 படங்கள் (பீட்ஸா, இறைவி, பேட்ட, ஜிகர்தண்டா) நடித்துள்ளார்.

இவர் பேசுவதைக் கவனித்தாலே, அதிர்ஷ்டத்தால் முன்னேறினாரா என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

"ஒரு நடுத்தர வர்க்கத்து இளைஞனுக்கு எப்பவுமே ஒரு ஏக்கம் இருக்கும். அந்த ஏக்கம் தான் தொடக்கம்னு நான் நினைக்குறேன். இந்த பக்கமா இல்ல அந்த பக்கமான்னு ? நான் பி காம் சேர்ந்துட்டு காலேஜ் போகும் போது என்ஜினீயர் ஆகியிருக்கலாமோ இல்ல டாக்டர் ஆகியிருக்கலாமோனு தோன்றி இருக்கு. ஆனா சயின்ஸ் எனக்கு வரவே வராது.

எனக்கு எதுவுமே வராதுன்னு நினைச்சுகிட்டு இருந்தேன். பயங்கரமான இன்பிரியர் காம்பிள்க்ஸ். நான் ஆளும் பாக்குறதுக்கு நல்லாயில்லன்னு நினைச்சிருக்கேன். எனக்கு பேச வராதுன்னு நினைச்சிருக்கேன். சிந்திக்க வராது, படிச்சா படிப்பு ஏறாது. இப்படி எல்லா விஷயமும் சேர்த்து என்னை டிப்பிரெஸ் பண்ணிகிட்டே இருந்தது.

ஆனா என்னிக்கு என்னை புரிஞ்சதோ அன்னிக்கு நான் தைரியமா லைப்பை ஒடைச்சுக்கிட்டு வெளியே வர ஆரம்பிச்சேன். நான் வெளியே வந்து பார்த்தா நான் புத்திசாலினு நம்புன நிறைய பேர், என்னைவிட முட்டா பசங்களா இருந்தாங்க. அவுங்க புத்திசாலினு நம்புனது தான் என்னோட முட்டாள்தனம்னு புரிஞ்சது.

எடுத்தவுடனே சினிமா ஆபீசே என்னால கண்டு பிடிக்க முடியாது. அப்புறம் ஒரு ஆபீஸ் கண்டு புடுச்சேன். அங்க ஒரு பிரண்ட் புடுச்சேன். அவர் மூலமா சில ஆபீஸ் தெரிஞ்சது அங்க சில பிரண்ட்ஸ் கிடைச்சாங்க. ஒரு விஷயத்தை அடிப்படையில் இருந்து கற்கும் போது மெல்ல மெல்ல அந்த விஷயம் பழகுது

திரைத்துறைக்கு வந்த பிறகு எனக்கு கிடைச்ச முதல் பாடம், "தேர் இஸ் நோ ப்பான் ஆக்டர் (There is no Born Actor)".

ஒரு ஸ்டில் போட்டோகிராபர் எடுக்குற கேமராவ என்னால பேஸ் பண்ண முடியாது. அவ்வளோ கூச்சம்,அதிகமான இன்பிரியாருடி காம்பிளக்ஸ் உள்ள ஒரு ஆளா இருந்தேன். அப்புறம் நான் எனக்குள்ள இருந்த எல்லா நெகடிவ்களையும் பிரேக் பண்ணிட்டு தான் உள்ளே வந்தேன்

"லவ் யுவர் ப்ரோபசன் (Love your Profession)". கண்டிப்பா ஒரு நாள் நினைச்சு பார்ப்பீங்க.அந்த ரியலைசேஷன் பாயிண்ட்-க்கு (Realization Point) அப்புறம், உங்க லைப்-ல நடக்குற எல்லாமே பாண்டஸி (Fantasy) தான் ".

இப்போ சொல்லுங்க, விஜய் சேதுபதியின் வெற்றிக்குக் காரணம் அதிர்ஷ்டமா..? இவர் மீது பொறாமை கொள்வது சரியா..?

**மந்திரச் சொல்**

உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு இல்லாத இடத்தில், அமைதியே சிறந்த பதில்.



கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸைவிட, இரண்டாவது இன்னிங்ஸே சுவாரஸ்யமாக இருக்கும். ஏனென்றால், ஆட்டத்தின் முடிவை தீர்மானிக்கும் இன்னிங்ஸ் இதுவே.

அப்படித்தான் மனிதர்களின் வாழ்க்கையும். ஆம், 50 வயதுக்குப் பிறகுதான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும். அது புரியாமல் பலரும் ஐம்பதைத் தொடும்போதே சோர்வுக்கு ஆளாகி துவண்டுவிடுகிறார்கள்.

50 வயதில் கிடைக்கும் நன்மைகளை பட்டியலிட்டுப் பார்த்தாலே, சுவாரஸ்யமாக வாழ்வதற்கு உரிய காரணங்கள் கிடைத்துவிடும்.

50 வயதில் பலமான, வளமான அறிவு கிடைத்துவிடுகிறது. அதுவரை பல விஷயங்களில் அனுபவப்பட்டு, தெளிந்து, வாழ்க்கையை புரிதலோடு பார்க்கிற பக்குவம் இந்த இரண்டாவது இன்னிங்ஸில் எளிதாகக் கிடைக்கிறது. உதாரணத்திற்கு ஒரு பொருளின் மதிப்பு எவ்வளவு, அதற்காக சண்டை போடலாமா, உறவு முக்கியமா இல்லையா என்பது போன்ற பல விஷயங்களில் தெளிவு வந்திருக்கும். பிறர் என்ன நினைக்கிறார்கள் என்ற கவலை இருக்காது. தனக்கு என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்துவிடுகிறது.

50 வயதுக்குப் பிறகும் வாழ்வதற்கு என ஒரு லட்சியம் என்று ஒன்று இல்லையே என்று பலர் சோர்வு அடைகிறார்கள். எல்லோருக்கும் லட்சியம் தேவை இல்லை. ஆம், வாழ்க்கையை நிம்மதியாக வாழ்வது மட்டுமே மிகச்சிறந்த லட்சியம். இதுவரையில் அம்மாவுக்காக, மனைவிக்காக, பிள்ளைகளுக்காக என்று வாழ்ந்திருப்பதை விடுத்து, தங்களுக்குஎன்றுவாழ்க்கையைவாழத்தொடங்கலாம்.

50 வயதுக்குப் பிறகும் புதிய விஷயங்களைத் தேடுங்கள், புதிய மனிதர்களிடம் பேசுங்கள். குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட ஆட்களோடு உட்கார்ந்து முதியோர் அரங்கம் உருவாக்க வேண்டாம். இளைஞர்களோடு பழகுங்கள். 25 வயதில் இருந்த உத்வேகம் அவர்களிடமிருந்து உங்களுக்கு மீளக் கிடைக்கும்.

வயதானதும் பலரும் உடை தேர்வில் ரசனையைக் குறைத்துவிடுகிறார்கள். அதற்கு அவசியம் இல்லை. இந்த வயதிலும் அழகான உடைகளை ரசனையுடன் தேர்வு செய்து, மிடுக்காக உடுத்துங்கள். 50 வயதில் நரையும், திரையும், வழுக்கையும் அழகு தான். உலகின் மிகப்பெரிய சாதனைகளைச் செய்தவர்கள், 50 வயதை தாண்டியவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எந்த தயக்கமும் இல்லாமல் வேறுபட்ட மனிதரோடு உரையாடுங்கள். புதிய நவீன சிந்தனையாளர்களின் புத்தகங்களைத் தேடி நிறைய படியுங்கள். உங்கள் மூளைக்கு தீனி போட நிறைய, நிறைய புதிய விஷயங்களைத் தேடிப் படியுங்கள். நகைச்சுவைக் கதைகளை, நிகழ்வுகளை, ஒளிமங்களை விரும்பிக் காணுங்கள். சிரித்துப் பேசுங்கள், பிறர் சிரிக்கப் பேசுங்கள், உங்களைச் சுற்றி ஒரு ஒளி வட்டம் நிலையாகும்.

விரோதிகளை விலக்குங்கள், பெருமைக்காரர்களை, பொறாமைக்காரர் களை கால விரயம் கருதி ஒதுக்குங்கள். மன ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் பேணுங்கள், நடைப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, சிறு சிறு ஆசனங்கள் தவறாது செய்யுங்கள்.

பொதுச்சேவையில் நாட்டம் கொள்ளுங்கள். ஏரி, குளம், தூய்மை, சுற்றுச்சூழல், பசுமை, சமூக நேர்மை காத்தலில் ஆர்வம் கொள்ளுங்கள். மகன், மகள் மற்றும் குறிப்பாக மருமகளை விமர்சனம் செய்யாதீர்கள்.

முதலில் நம்மைச் சார்ந்தவர்களுக்கு, பின்னர் அடுத்தவர்களுக்கு, உதவி தேவைப் படுபவர்களுக்கு, உங்களால் இயன்ற வகையில் உதவுங்கள். அவர்கள் நன்றியில் உங்களை நீங்களே புதிதாக ரசித்து மகிழ்வீர்கள்.

இவற்றை எல்லாம் செய்துவந்தால் உடல் ஆரோக்கியம் பற்றிக் கவலைப் படத் தேவையே இல்லை. ஆம், மனம் இளமையோடு இருக்கும்போது உடலும் இளமைத் துள்ளலாகவே இருக்கும்.

அனுபவம், அன்பு, சகிப்புத்தன்மை யுடன் வருங்காலத்தை வழிநடத்தலாம்.

www.gyanaguru.com

# செகண்ட் இன்னிங்ஸ்



www.gyanaguru.com

# உடலுக்குள் ஒரு பூகம்பம்..!

மரத்தின் அடியில் அமர்ந்திருந்த இளைஞன் தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பிருக்கிறது என்று வேதாச்சலம் அச்சப்படுவதைக் கண்ட ஞானகுரு, நேரடியாக அவனிடம் பேசும் முடிவுக்கு வந்தார்.

அவனை நோக்கி நகர்ந்தபோதே, அவனை கண்களால் கணக்குப் போட்டார். ஓரளவு வசதியான குடும்பம். இளவயது. காதலைத் தவிர வேறு எந்த சோகமும் இத்தனை தூரம் பாதிக்காது என்ற அனுமானத்திற்கு வந்தார். அவனை நெருங்கியதும், “உன்னை ஏமாற்றியவள் பெயர் என்ன மகனே... அவளை என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறாய்... உன் ஆசையை நிறைவேற்றித் தருகிறேன்...” என்றபடி ஞானகுரு சட்டென அவன் அருகில் அமர்ந்தார்.

மழையின் சாரலில், நள்ளிரவில், இப்படி ஒரு கேள்வியை, சம்பந்தமே இல்லாத ஒரு சாமியாரிடம் இருந்து கேட்டதை எதிர்பார்க்காமல் அதிர்ச்சி அடைந்தான். ஞானகுருவுக்குப் பக்கத்தில் நின்ற வேதாசலத்தையும் அவனுக்கு அடையாளம் தெரியவில்லை என்பது பார்வையிலே தெரிந்தது.


”நீங்கள் குற்றால சித்தரா..?” என்று கேள்வி எழுப்பியபடி எழ முயன்றான்.

''அப்படியே வைத்துக்கொள். இன்று மாலையிலிருந்து நீ ஒரே ஒரு இட்லி மட்டும்தான் புசித்திருக்கிறாய் சரிதானே...'' என்றபடி வேதாசலத்தைப் பார்த்து கண் சிமிட்டினார்.

இந்த ஆருடத்தைக் கேட்டு மிரண்டுபோய், “நீங்கள் யாரென்று முதலில் சொல்லுங்கள்” என்று தடுமாறினான்.

”என்னைப் பற்றி எதற்கு..? உன்னுடைய குல தெய்வம் எனக்கு ஆணையிட்டதால் நான் இங்கு வந்திருக்கிறேன். உன் விருப்பத்தை நிறைவேற்றித்

ஞானகுரு பயணம்





தரும்படி எனக்கு உத்தரவு வந்துள்ளது. இப்போது சொல் நீ தற்கொலை செய்வதற்கு உதவ வேண்டுமா அல்லது உன் காதலியை மனம் மாற்ற வேண்டுமா?" என்றேன்.

"சாமி... நான் இங்கே ஒரு லாட்ஜில் ரூம் போட்டிருக்கேன், அங்கே போய் பேசுவோமா?" என்று பரபரத்தான்.

அவன் விருப்பதற்கு தடை போடாமல் எழுந்து நின்றார் ஞானகுரு. மூவரும் நடந்தனர். வசதியான ஹோட்டலில் ரூம் போட்டிருந்தான் அந்த அறைக்குள் நுழைந்ததும், அவனது காதல் கதையை அவசரமாக ஞானகுருவிடம் ஒப்பித்தான்.

லதாவை உயிருக்குயிராக காதலித்திருக்கிறான் இவன் பிரசாத். இருவரும் கல்லூரி இறுதியாண்டு படிக்கிறார்கள். இவனுக்குப் பிடிக்காத ஒரு நண்பனுடன் லதா அடிக்கடி பேசுவதைப் பார்த்து கண்டித்திருக்கிறான். சந்தேகப் படுகிறவனை காதலிக்க முடியாது என்று தாறுமாறாகப் பேசி சண்டை போட்டு பிரிந்து விட்டாளாம் லதா.

இப்பொழுது, பிரசாத்துக்குப் பிடிக்காத நண்பனுடன் முன்னைவிட நெருங்கிப் பழகுவதும், அவனையே காதலிப்பதும் பிரசாத்துக்கு ஆத்திரத்தைக் கிளப்பியிருக்கிறது. லதாவைப் பார்க்கும் போதெல்லாம் ஆத்திரம் வருவதால், அவளை பழி வாங்குவதற்கு நல்லவழியாக தற்கொலையை தேர்வு செய்திருக்கிறான். லதா மீது நிறைய குற்றச்சாட்டுகளை கடிதமாக எழுதிவிட்டு, குற்றாலத்தில் தற்கொலை செய்துகொள்வது அவனுடைய திட்டம். ஆனால், இன்னும் அதற்குத் தைரியம் வரவில்லை என்பதால் காத்திருக்கிறான்.

"ஒரே நதியில் இரண்டு முறை கால் நனைக்கமுடியாது பிரசாத்..." என்று ஞானகுரு சொன்னதும், அர்த்தம் புரியாமல் விழித்தான்.

"எனக்கு தமிழ் பேச மட்டும்தான் தெரியும், சின்னப் பிள்ளையில இருந்தே இங்கிலீஸ் மீடியம்தான் படிச்சேன், தமிழ்ல கஷ்டமா ஏதாவது கேட்டாத் தெரியாது..." என்று பிரசாத் சொன்னதும் வாய்விட்டு சிரித்தார் ஞானகுரு.

"தமிழ் நாட்டில் தாய்மொழியை மறந்த ஒரு நல்ல தலைமுறை உருவாகியிருக்கிறது" என்று வெற்றுப் புன்னகை வீசிவிட்டு பேசத் தொடங்கினார். "நதியின் நீர் நிற்காமல் ஓடிக்கொண்டே இருப்பதால், ஒவ்வொரு முறையும் வெவ்வேறு நதியில் கால் நனைப்பதாகத்தான் அர்த்தம். அதாவது, ஒவ்வொரு கணமும் பழைய நதி நகர்ந்துபோய்... புதிய நதி அங்கே பிறக்கிறது. அதுபோல், உனக்குத் தெரியாமல் ரகசியமாக உனக்குள்ளே, தினமும் ஏராளமான பிரிவுகள், இணைப்புகள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. நேற்று இருந்த நீ இன்று இல்லை. உன்னுடைய உடலில் உள்ள அணுக்கள் செத்துச்செத்து புதுப்புது அணுக்கள் உருவாகிறது. உன் உடலுக்குள் தினமும் பூகம்பமே நடக்கிறது. தினமும் நீ பிரிகிறாய்... சேர்கிறாய். நீ குழந்தையாக இருந்தது முதல் வாலிபனாக வளர்ந்தது வரை எத்தனையோ நபர்களை, பள்ளி நண்பர்களை, உறவுகளை பிரிந்திருக்கிறாய். ஆனால் காதல் பிரிவை மட்டும் மறக்க முடியாமல் தவிக்கிறாய் அப்படித்தானே..."

## மந்திரச் சொல்

> பாதை முழுவதும் கரடு முரடாக இருக்கிறது என்று குற்றம் சாட்டுவதைவிட, தரமான செருப்பு அணிவதே நிம்மதியான தீர்வு.

"ஆமாம் சாமி..."

"உன்னுடைய தாய் அல்லது தந்தை எதிர்பாராமல் மரணம் அடைந்தால் என்ன செய்வாய்?"

இப்படியரு கேள்வியைக் கேட்டு தயங்கியவன், "ரொம்பவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும்... வாழ்றதுக்கே சிரமப்படணும்..." என்றான்.

"உன்னை இந்த உலகத்துக்குக் கொண்டுவந்தவர்கள், உனக்காக பணம் செலவழித்து படிக்க வைப்பவர் கள், உன் முன்னேற்றத்திற்காக கனவு காண்பவர்கள் உன் பெற்றோர்கள். அவர்கள் இறந்தால்கூட, நீ அவர்களுக்காக உயிரைவிட மாட்டாய், வாழ்வதற்கு சிரமப்படுவாய் ஆனால் எவளோ ஒரு பெண் உன்னை ஒதுக்கிவிட்டதற்காக தற்கொலை செய்து கொள்ளப் போகிறாய் அப்படித்தானே... உன் இறப்பை உன் பெற்றோர் எப்படி தாங்குவார்கள்..?"

ஞானகுரு கேள்விக்கு அமைதியாக இருந்தான் பிரசாத்.

"அவள் வேறு ஒருவனை காதலிக்கவில்லை என்றால், உனக்கு இத்தனை கோபம் வந்திருக்குமா..? உனக்கு அவள் மீது இருப்பது கோபம் அல்ல. அவள் சந்தோஷமாக இருப்பதை பார்த்து சகித்துக்கொள்ள முடியாத அவமானம். அப்படித்தானே..?" என்று ஞானகுரு குரல் உயர்த்திய நேரத்திலும் அமைதி காத்தான்.

"பிரிவு என்பது ஒரு மாற்றம். மாற்றம் இல்லாத வாழ்க்கை சுவாரஸ்யம் இல்லாதது.

# ஆறுதல் சொல்ல நாங்கள் இருக்கிறோம்!



மனதில் இருக்கும் துயரம், வேதனை, வருத்தம், கோபம், ஆசை போன்ற எண்ணங்களை கொட்டித் தீர்ப்பதற்கு எல்லோருக்கும் ஒரு தோழமை கிடைத்துவிடுவதில்லை.

மனதில் சேர்த்துவைக்கும் துயரங்களும் துன்பங்களும் நோயாக மாறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, மனதை அழுத்திக்கொண்டிருக்கும் விஷயங்களைப் பேசி ஆறுதல் அடையுங்கள். மனதில் இருப்பதை பேசிவிட்டாலே உங்கள் சுமை குறைந்துபோகும்.

உங்கள் மனதில் இருக்கும் சுமைகளை ஞானகுரு உறுப்பினர் களிடம் மனம்விட்டுப் பேசுங்கள். செல்போன் மூலம் மட்டுமே இப்போது ஆறுதல் மையம் செயபடுகிறது. ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு சிறு கட்டணம் உண்டு.

**முன்பதிவுக்கு அணுகுங்கள்**

**044 – 24730338**

## ஞானகுரு மகிழ்ச்சி

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல்,
**நிர்வாக மேலாளர் :** எம்.நிலா **வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ் – கே.எம்.பிரசன்னா
ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜூனா நகர் 2வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.
**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112
**மெயில் :** skmnila1@gmail.com

எல்லா உறவுகளையும் ஏதாவது ஒரு கட்டத்தில் நீ இழந்துதான் ஆக வேண்டும், பிரிந்துதான் ஆகவேண்டும். இந்த உடலையும் ஒரு நாள் நீ துறந்துதான் ஆகவேண்டும். ஆகவே, நிரந்தரமான உறவு என்று இந்த உலகில் எதுவும் இல்லை...'' என்று சொன்னதும் வாய் திறந்தான்.

''ஆனா, காதல் தோல்வியைப் போல் இதுவரை என்னை எதுவும் பாதிக்கலையே சாமி?''

''இப்போது உனக்கு அப்படித்தான் தோன்றும். ஆனால் காலம் என்ற ஓர் அற்புத மருத்துவன் உனக்காகக் காத்திருக்கிறான். அவன் உன் காயத்தைக் குணப்படுத்துவான்...''

''எனக்கு உதவி செய்வதாகச் சொன்னீர்கள்... ஆனால், அட்வைஸ் செய்கிறீர்கள்...உங்களுக்கு என் வேதனை புரியாது...''

''உன் பசியை நான் உணர முடியாது. ஆனால், உன் பாதையில் தடை இருந்தால், அதை சுட்டிக் காட்ட முடியும். இந்த காதல் தோல்வி என்பதும் அப்படி ஒரு தடைக்கல் மட்டுமே தவிர, மூடப்பட்ட கதவு அல்ல. காதல் தோல்விக்கு அற்புதமான மருந்து காலம்தான். ஆனாலும் காயம் ஆறும் வரை காத்திருக்காதே. நீ யாரால் ஏமாற்றப் பட்டதாக நினைக்கிறாயோ, அவள் நன்றாக வாழவேண்டும் என்று மனசார வாழ்த்து... உண்மையான காதலன் அதையே செய்வான். எனவே, நீ அவள் பாதையில் இருந்து விலகு. உனக்கு அதைவிட சிறந்த வேறு ஒரு பாதை காத்திருக்கிறது'' என்று சொன்ன பிறகும் அவனிடம் முழு மாற்றம் தென்படவில்லை.

சிலருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தால்தான் சரியாக இருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட ஞானகுரு, அந்த வழியை தேர்வு செய்தார்.

''சமீபத்தில் உங்கள் குடும்பத்தில் அதிர்ச்சிகரமான ஒரு காரியம் நடந்ததா..?'' குருட்டாம் போக்கில் கேட்டார். எந்த குடும்பத்தில்தான் சிக்கல் இல்லாமல் இல்லை.

''ஆம், எங்கள் அப்பாவுக்கு நெஞ்சு வலி வந்தது, நல்ல நேரத்தில் பார்த்துவிட்டதால் ஆபத்து இல்லை. ஸ்டென்ட் வைத்திருக்கிறார்கள்... ஏன்..?''

''உன் தந்தைக்கு நெஞ்சு வலியைக் கொடுத்தது காலம் அல்ல... உன்



''சமீபத்தில் உங்கள் குடும்பத்தில் அதிர்ச்சிகரமான ஒரு காரியம் நடந்ததா..?'' குருட்டாம் போக்கில் கேட்டார். எந்த குடும்பத்தில்தான் சிக்கல் இல்லாமல் இல்லை.



காதலி. ஆம், அவளுடைய ஜாதகத்தில் இருக்கும் தோஷமே உங்கள் குடும்பத்தை ஆட்டிப் படைக்கிறது. ஆனால், உன் குலதெய்வம் உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுகிறது. லதாவுடன் நீ சேர்ந்தால், உன் பெற்றோரில் ஒருவரை இழக்க வேண்டியிருக்கும். உனக்கும் அகால மரணம் ஏற்பட்டு பேயாக சுற்றிக் கொண்டிருப்பாய். இவற்றில் இருந்து உன்னை காப்பாற்றத்தான் நான் வந்திருக்கிறேன். இதற்கு மேல், கால ரகசியம் எதையும் சொல்ல முடியாது. என்னை சந்தித்தது குறித்து உன் பெற்றோரிடம் சொல்லாதே, அந்த பெண்ணிடமும் பேசாதே... உன்னுடைய பாதையில் பயணம் செய்...'' என்றபடி எழுந்தார் ஞானகுரு.

இந்த இரவும், வெளியே பெய்த மழையும் பிரசாத்துக்கு ஞானகுருவின் பேச்சு மீது அதீத நம்பிக்கை கொடுத்தது. இவர் சொல்வது எல்லாமே உண்மையாகத்தான் இருக்கும் என்று நம்பினான். அவன் முகத்தில் இப்போது தெளிச்சி வந்தது.

''சாமி... ரொம்பவும் சந்தோஷம் நான் இதுவரைக்கும் என்னைப் பத்தி மட்டும்தான் நினைச்சேனே தவிர அம்மா, அப்பாவைப் பத்தி யோசிக்கவே இல்லை. லதா ஏற்கெனவே நம்ம ஜாதகம் செட் ஆகாதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தா, நான் நம்பலை. இப்ப எனக்கு எல்லாமே தெளிவா தெரியுது. இனிமே நான் பெத்தவங்களுக்காக வாழப்போகிறேன்'' என்றவன் உடனே அவனது உடமைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு ஊருக்குக் கிளம்பத் தயாரானான்.

அவனுடைய பர்ஸை எடுத்து டிராவல் பேக்கினுள் திணிக்கப் போனவன், அதனை விரித்து கைக்கு வந்த பணத்தை எடுத்து ஞானகுரு விடம் கொடுத்தான். ''உங்களைப் போன்றவர்களுக்கு பணம் கொடுத் தால் அம்மா சந்தோஷப்படுவார்... வேண்டாமென்று சொல்லாதீர்கள்...'' என்று திணித்தான்.

வாய்விட்டு சிரித்தார் ஞானகுரு.

# கவித்துவம்

வாழ்த்து செய்தியும்,
இரங்கல் செய்தியும்
சுமந்துக் கொண்டு விழுகிறது
பூக்கள்

– தனிதன்



www.gyanaguru.com



www.gyanaguru.com

# மிருகங்களுக்கு ஏன் பைத்தியம் பிடிப்பதில்லை

மயிலின் நிறமும் தோகையும் பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருக்கும். காக்கையின் நிறம் அத்தனை இதமளிப்பது இல்லை. ஆனால், மயில் ஒருபோதும் பெருமைப்பட்டு கொண்டதில்லை. காகம், தன்னை சிறுமைப்படுத்திக் கொண்டதும் இல்லை. அதனதன் இயல்புடன் வாழ்கின்றன.

சில மரங்கள் உயரமானவை; சில மரங்கள் சிறியவை. ஆனால் சிறிய மரங்கள் பதட்டமாக இல்லை – உயரமான மரங்களும் ஈகோ நிறைந்தவை அல்ல.

இப்போது மனித வாழ்வுக்கு வருவோம். உங்களுக்குத் தெரிந்த யாரோ ஒருவர் உங்களை விட வலிமையானவர்; யாரோ ஒருவர் உங்களை விட புத்திசாலி. ஆனால் அதை பற்றி உங்களுக்கு என்ன..? ஏனென்றால், ஏதோ ஒரு விஷயத்தில், நீங்கள் மற்றவர்களை விட திறமையானவர்களாக இருப்பீர்கள். அதனை உணர்ந்துகொண்டால் போதும்.

ஆனால், பிறரிடம் இருப்பது நம்மிடம் இல்லை என்ற தவறான வாழ்க்கை முறையே மனிதரிடம் உள்ளது. பிறரை மிஞ்ச வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி வருகிறது. ஆனால், இந்த ஒப்பீடும், போட்டியும் பதற்றத்தை உருவாக்கும்

ஒப்பீடு மக்களை வழிதவறச் செய்கிறது. போட்டி அவர்களை தொடர்ந்து பதட்டமாக வைத்திருக்கிறது, மேலும் அவர்களின் வாழ்க்கை காலியாக இருப்பதால், அவர்கள் இந்த கணத்தில் வாழவே இல்லை. அவர்கள் செய்வது எல்லாமே கடந்த காலத்தை நினைப்பது அல்லது எதிர்காலத்திற்கு திட்டமிடுவது. இதுதான் மனிதனின் மனதை அசைத்து அசைத்து பைத்தியம் பிடிக்க வைக்கிறது.

ஆனால், எந்த மிருகத்திற்கும் பைத்தியம் பிடிக்காது, எந்த மரத்திற்கும் மனோ பகுப்பாய்வு கிடையாது. எனவே, அவை தொடர்ச்சியாக இன்றைய கணத்தில் மட்டும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றன. வாழ்க்கையை கொண்டாடுகின்றன.

ஆனால், மனிதன் பிறருடன் ஒப்பிடுவதன் மூலம் தன்னுடைய சின்னஞ்சிறிய வாழ்க்கையை இழந்துவிடுகிறான். ஒவ்வொரு நாளும் மரணம் நெருங்கி வருகிறது என்பதை நோயின் மூலம் அல்லது பிறரது மரணத்தின் மூலம் தெரியவரும்போது, மேலும் பதட்டமாகிறார்கள். அப்போதுதான், ‘ நான் இன்னமும் வாழத் தொடங்கவில்லை.’ என்பதை புரிந்துகொள்கிறார்கள்.

ஆம், பெரும்பாலான மக்கள் தாங்கள் உயிருடன் இருப்பதை இறக்கும்போதுதான் உணர்கிறார்கள். ஆனால் அது மிகவும் தாமதமானது. எனவே, இன்றைய தினத்தில் வாழுங்கள். உங்களிடம் என்ன திறமை இருக்கிறதோ, அவற்றை முழுமையாக பயன்படுத்துங்கள்.

சுதந்திர போராட்ட காலங்களில் காந்திஜிக்கு தலைக்கு மேல் வேலைகள் இருந்தன. ஆனாலும் அவர் நூல் நூற்றார், தியானம் செய்தார், தன்னுடைய பாத்ரூமை சுத்தம் செய்தார்.

‘இதையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்... நீங்கள் இந்திய மக்களுக்காக நேரம் ஒதுக்குங்கள்’ என்று அவரது சீடர்கள் சொன்னார்கள். அப்போது அவர், ‘எனக்கு பிடித்தமானதை வேறு எவரும் செய்ய முடியாது... போராட்டத்தை நீங்கள் நடத்த முடியும். ஆனால், எனக்கான நூலை நான் நூற்பதுவே எனக்கு திருப்தி தரும்” என்றார்.

ஆனால் மக்கள் எப்போதும் மற்றவர்களைப் பார்க்கிறார்கள், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் - யாரோ புல்லாங்குழல் வாசிக்கிறார்கள், உங்களால் முடியாது, உடனடியாக துன்பம் ஏற்படுகிறது; யாரோ ஓவியம் வரைகிறார்கள், உங்களால் முடியாது, துன்பம் இருக்கிறது.

நீங்கள் எதைச் செய்கிறீர்கள், அதை மிகவும் அன்போடு செய்யுங்கள், மிகுந்த அக்கறையுடன், உலகின் மிகச்சிறிய விஷயம் ஒரு கலையாக மாறும். அது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். அது போட்டியின்றி, ஒப்பீடு இல்லாத உலகை உருவாக்கும்; அதுவே மகிழ்ச்சி.

# மந்திரச் சொல்

பிள்ளையை பெற்றோர் பராமரிப்பது கடமை. ஏனென்றால், அந்த பிள்ளையை பெற்றெடுத்தது அவர்கள். எனவே, குறிப்பிட்ட வயது வரையிலும் வளர்த்து, பிள்ளையின் எதிர்காலத்துக்குத் தேவையானதை செய்து கொடுக்கவேண்டிய கட்டாயம், பெற்றோருக்கு உண்டு.

அதேநேரம், பெற்றோரை கவனிக்க வேண்டிய பொறுப்பு பிள்ளைக்கு உண்டா..?

உண்மையைச் சொல்வது என்றால் இல்லை.

இயற்கையும் அப்படி படைக்கவில்லை. ஆம், மனிதனைத் தவிர எந்த உயிரினமும் வயதான காலத்தில் தங்கள் பிள்ளைகளுக்குப் பாரமாக இருப்பதில்லை. எனவே, பெற்றோரை பிள்ளைகள் கண்டிப்பாக கவனிக்க வேண்டும் என்று சொல்வதற்கு எந்த ஒரு நியாயமும் இல்லை.

அப்படியாயின் முதுமையில் என்ன செய்வது..?

தன் பிள்ளையின் எதிர்காலத் துக்கு திட்டமிட்ட பெற்றோர், தங்கள் எதிர்காலத்திற்கும் உரிய வகையில் திட்டமிட்டிருக்க வேண்டும். அதுவே, சரியான சிந்தனை.

சட்டப்படி, பெற்றோரை கவனிக் கவேண்டிய கடமை பிள்ளைக்கு உண்டு என்று வாதாடலாம். ஆனால், அன்பும் அக்கறையும் இல்லாமல் பெற்றோரை கடமைக்காக கவனிப்பதை, எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்..? எப்படி மதிக்க முடியும்.

ஆனாலும், ஒருசிலர் பெற்றோரை பெருமையாக மதிக்கிறார்கள்... காலம் முழுவதும் பணிவிடை செய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் பிள்ளைகள் அல்ல... அதற்கும் மேலானவர்கள்.

இதனை விளக்கும் சம்பவம் இது.

அது ஒரு உயர்ரக ரெஸ்டாரன்ட். தனது வயதான தந்தையை அழைத்து வந்து, அவருக்குப் பிடித்தமான உணவை ஆர்டர் செய்கிறான் மகன். அந்த உணவு வருகிறது.

தந்தை வயது முதிர்ந்த நிலையில் இருக்கிறார். கை, கால்களில் நடுக்கம் தெரிகிறது. கண் பார்வையிலும் அத்தனை தெளிவு இல்லை. எனவே அவர் சாப்பிடும்போது, அவர் மீதும் மேஜையின் மீதும் உணவுத் துகள்கள் விழுகிறது.

> எல்லோரும் எல்லாமும் தெரிந்திருப் பதில்லை. எல்லோருக்கும் ஏதாவது ஒன்று தெரியும். எனவே, காது கொடுத்துக் கேளுங்கள்.



# பிள்ளைகளும் தெய்வம் ஆகலாம்..!

தண்ணீர் குடிக்கும்போது மேலும் கீழுமாக கொட்டுகிறார். ஸ்பூனால் உணவை எடுக்க முயன்று கீழே தள்ளுகிறார்.

அக்கம்பக்கத்தில் சாப்பிடுவோர், இதனையே பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த தகப்பனையும் மகனையும் உற்றுப் பார்க்கிறார் கள். இதை மகன் பார்த்தாலும், மற்றவர்களை கொஞ்சமும் லட்சியம் செய்யாமல், அப்பாவையே கவனிக்கிறான். உணவை அவர் எடுத்து சாப்பிடு வதற்கு சின்னச்சின்ன வகையில் உதவிக் கொண்டு, அவரை சாப்பிடத் தூண்டுகிறான்.

தந்தை சாப்பிட்டு முடித்ததும், அவரை ஓய்வு அறைக்கு அழைத்துச்சென்று, அவரது முகத்திலும் ஆடையிலும் ஒட்டியிருந்த உணவுத் துகள்களை துடைத்துக் கழுவி, அவரது தலையை வாரி அவரது கண்ணாடியை சரியாகத் துடைத்து அவருக்கு மாட்டி, கைத்தாங்கலாக வெளியே அழைத்துவருகிறான்.

பில் வருகிறது. தந்தையை அழைத்துக்கொண்டு கவுண்டருக்கு பில் கொடுக்கச் செல்கிறான். அப்போது ஒருவர் எழுந்து, "தம்பி... நீங்கள் இங்கு எதையாவது விட்டுவிட்டுச் செல்கிறீர்களா" என்று கேட்டதும், அந்த கேள்வியால் குழப்பமடைந்த மகன், "இல்லையே... நான் எதையும் மிஸ் பண்ணவில்லை" என்று சொல்கிறான்.

அதற்கு அந்த மனிதர், "இல்லை... நீங்கள் இங்கு சிலவற்றை விட்டுச் செல்கிறீர்கள். இளையோருக்கு ஒரு பாடத்தை விட்டுச் செல்கிறீர்கள். எல்லா பெற்றோருக்கும் நம்பிக்கையை விட்டுச் செல்கிறீர்கள்"என்கிறார்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அத்தனை பேரும் அந்த மகனுக்கு எழுந்துநின்று கை தட்டினார்கள். ஏனென்றால், இதுபோன்ற பிள்ளைகள் கடவுளுக்கும் மேலானவர்கள்.




www.gyanaguru.com

# சொத்துக்களை பிரிப்பது எப்போது..?

நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்த ஞானகுருவை சந்தித்தார் மகேந்திரன். அவருடன் வந்திருந்த முதியவர் அவசரமாக ஒரு கேள்வி எழுப்பினார்.

“சாமி... என்னுடைய மனைவி சமீபத்தில் இறந்துவிட்டார். என்னுடைய உதவிக்காக வேலைக்கு ஆட்கள் இருக்கிறார்கள். ஒரு நர்ஸ் தினமும் வந்து பார்ப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். எனக்கு ரெண்டு பசங்க இருக்காங்க. அவங்க யாரும் இப்போ என்கூட இல்லை. தனித்தனியா பிசினஸ் பண்றாங்க... அவங்க பிசினஸ் பண்றதும் நான் குடுத்த பணம்தான். எப்போதாவது வந்து என்னை பார்த்துச் செல்கிறார்கள்.

என்னுடைய மனைவி இல்லாமல் நான் தனியே இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. என்னை அவர்களுடன் வந்து தங்கச் சொல்கிறார்கள். பேரன், பேத்திகளுடன் இருப்பதற்கு எனக்கும் ஆசைதான். ஆனால், அதற்குள் என்னிடம் இருக்கும் பரம்பரை சொத்தையும், நான் சம்பாதித்த சொத்தையும் சரிபாதியாக பிரித்துக் கேட்கிறார்கள். நான் என்ன செய்வது..?'' குழப்பமாக கேள்வி கேட்டார்.

“நீ என்ன செய்யலாம் என்று நினைக்கிறாய்..?”

“சொத்தை மூன்று பங்காகப் பிரித்து, இரண்டு பங்கை அவர்களுக்கு கொடுத்துவிட்டு, ஒரு பகுதியை எனக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறேன். அதை என்னை கவனித்துக்கொள்ளும் வேலைக்காரர்களுக்கு என் மரணத்திற்குப் பிறகு கொடுக்க ஆசைப்படுகிறேன்'' என்றார்.

''குருவிகள் கூடு கட்டி முட்டை போடுவதை பார்த்திருக்கிறாயா.. அந்த முட்டைகளை மிகவும் பத்திரமாக பாதுகாக்கும். குஞ்சு பொரித்தவுடன் நேரத்துக்கு

நீ விருப்பப்படும் நேரத்தில் உன் பிள்ளைகளை போய் பார்... அவர்கள் விரும்பும் நேரத்தில் உன்னை பார்க்க வரட்டும். ஆனால், சொத்துக்கள் உன் மரணத்திற்குப் பிறகு உன் பிள்ளைகளைச் சேரும் என்று மட்டும் எழுதி வை. அதுவே போதும்.




## மந்திரச் சொல்

நம்பிக்கை யின் மீது கட்டமைக்கப் படுவதே, நல்ல உறவு.

நேரம் நேரம் மிகச்சரியாக புழுக்களை கொண்டுவந்து கொடுத்து வளர்க்கும். இறக்கை முளைத்ததும், அந்த குஞ்சுகள் பறந்து சென்றுவிடும். அதன்பிறகு, அந்த குஞ்சுகள் ஒருபோதும் தாயை திரும்பிப் பார்ப்பதில்லை.

நீ உன் பிள்ளைகளுடைய தேவைகளை நிறைவேற்றிவிட்டாய். இப்போது நீயும் சுதந்திரமாக வாழ்கிறாய். இதுவே சரியான வாழ்க்கை. நீ விருப்பப்படும் நேரத்தில் உன் பிள்ளைகளை போய் பார்... அவர்கள் விரும்பும் நேரத்தில் உன்னை பார்க்க வரட்டும். ஆனால், சொத்துக்கள் உன் மரணத்திற்குப் பிறகு உன் பிள்ளைகளைச் சேரும் என்று மட்டும் எழுதி வை. அதுவே போதும்.

வேலைக்காரர்களுக்கு சொத்து எழுதி வைக்க நினைப்பது உன்னுடைய நல்லெண்ணமாக இருக்கலாம். ஆனால், அதை உன் பிள்ளைகள் விரும்ப மாட்டார்கள். வேலைக்காரர்கள் அதன்பிறகு உன்னுடைய வாழ்க்கையைக் கவனிக்க மாட்டார்கள், உன் மரணத்தையே எதிர்பார்ப்பார்கள். அதனால், நீ வாழும் வரையில் அவர்களுக்கு உன்னால் என்னவெல்லாம் உதவிகள் செய்யமுடியுமோ, அதை மட்டும் செய். வேலைக்காரர்களை கொலைகாரர்களாக மாற்றிவிடாதே...”

“இப்போதே நான் சொத்து எழுதித் தரவில்லை என்றால் என் பிள்ளைகள் என்னை கொன்றுவிட மாட்டார்களா..?”

“அப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றிருக்கிறாய் என்றால், அப்படியே செத்துப் போ. அதற்கான பலனை அவர்கள் அனுபவிக்கட்டும்...”

“என் மரணத்துக்குப் பிறகு என்றாலும், இருவருக்கும் எந்தெந்த சொத்துக்கள் என்று நானே பிரித்து வைத்துவிடவா..?”

“வேண்டாம்... நல்ல சகோதரர்களாக இருந்தால் எளிதாக பிரித்துக்கொள்ளட்டும். பேராசைக்காரர்கள் என்றால் சண்டை போட்டு, உன் சொத்து நீதிமன்றத்தில் நிற்கட்டும்...”

“இது தவறு இல்லையா..?”

“உன் தேவைக்கு அதிகமாக சம்பாதித்தது தவறு. எனவே நீ சம்பாதித்ததை நீ நன்றாக அனுபவி... அதுதான், இந்த முதுமையில் நீ செய்ய வேண்டிய செயல்...”

முதியவர் இப்போது தெளிவுக்கு வந்திருந்தார்.




www.gyanaguru.com

அத்தியாயம்-14



www.gyanaguru.com



# ரஜினி எப்படி சூப்பர் ஸ்டாராக மாறினார்..?

ஆழ்மனமே தாழ் திறவாய்!

ஆழ்மனம் என்பது அற்புத வரங்களைத் தரக்கூடிய அமுதசுரபி. வேண்டிய வரங்களைப் பெற வேண்டும் என்றால், தினமும் ஆழ்மனதுடன் அன்புடன் பேச வேண்டும். அழுத்தமான நம்பிக்கையுடன் பேசினால், கேட்பது கிடைக்கும், நினைப்பது நடக்கும். இதனை முழு மனதுடன் நம்புவதுதான், ஆசையை நிறைவேற்றுவதற்கான முதலும், கடைசியுமான ஒரே வழி.

அதேநேரம் மந்திரத்தில் மாங்காய் விழுவது போல், தங்கள் வாழ்க்கையில் ஆழ்மனம் மேஜிக் நிகழ்த்த வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள், அவசரப்படுகிறார்கள்.

அதனால்தான், 'என்னுடைய அலுவலக மேனேஜருக்கும் எனக்கும் நிஜமாகவே நல்லுறவு திகழ வேண்டும் என்று தினமும் ஆழ்மனதுடன் பேசிப் பார்த்தேன்... என் மாமியார் என்னை பாராட்ட வேண்டும் என்று நிஜமாகவே ஆழ்மனதில் விதை போட்டேன். கிட்டத்தட்ட ஒரு மாதம் முழுக்கவே காலை எழுந்ததும் என் ஆழ்மனதில் மந்திரம் போன்று பேசியும், கொஞ்சமும் பலன் தென்படவில்லை' என்று பலர் குறை சொல்கிறார்கள்.

அவர்கள் ஆசைப்பட்டது ஏன் நடக்கவில்லை என்றால், இன்னமும் அவர்கள் ஆழ்மனதின் மீது முழு நம்பிக்கை வைக்கவில்லை என்று அர்த்தம். அவநம்பிக்கை எனும் மரம் அவர்கள் மனதுக்குள் எத்தனை தூரம் வேர் விட்டு அழுத்தமாகப் படர்ந்திருக்கிறதோ, அத்தனை அளவுக்கு கால தாமதம் ஏற்படவே செய்யும். எனவே, விடிந்தே தீரும், முடிந்தே தீரும் என்ற அழுத்தமான நம்பிக்கையுடன் காத்திருக்கத்தான் வேண்டும்.

முடியாது, நடக்காது என்பது போன்ற நெகடிவ் வார்த்தைகளை மனதில் இருந்து விரட்டியவர்களே, இந்த உலகில் வெற்றியாளராகத் திகழ்கிறார்கள்.

உலகின் அதிவேக ஓட்டக்காரரான உசேன் போல்ட், 100 மீட்டர் ஓட்டப்பந்தய இலக்கை 9.58 விநாடிகளில் கடந்து உலக சாதனை படைத்தார். அவர் மின்னல் வேகத்தில் ஓடி சாதனை நிகழ்த்திய, அந்த 10 நொடிகளைத்தான், இந்த உலகம் பார்த்து, ரசித்து, கொண்டாடுகிறது. ஆனால், அந்த சாதனையை நிகழ்த்துவதற்கு அவர் எத்தனை வருடங்கள் கஷ்டப்பட்டு உழைத்திருப்பார், இரவு பகலாக எத்தனை மணி நேரம் பயிற்சி எடுத்திருப்பார் என்பது அவருக்குத்தான் தெரியும். 10 விநாடிகளில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை அடைவது சாத்தியமில்லை என்று பலர் அவரிடம் கூறியபோதும், அவரிடம் ஆழமான நம்பிக்கை இருந்தது. அவரது ஆழ்மன நம்பிக்கையே, அசைக்கமுடியாத ஒரு உலக சாதனையை நிகழ்த்திக்

காட்டியது.

எனவே, மேனேஜர் மனதையும் மாமியார் மனதையும் நிச்சயம் மாற்றிவிட முடியும் என்ற அழுத்தமான நம்பிக்கையை மனதில் விதைத்துக்கொண்டே இருங்கள். அது, ஆழமாக ஊடுருவி வேர் பிடிக்க வேண்டும்.

ஆழ்மன நம்பிக்கைக்கு, இன்று வாழும் உதாரணமாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை சொல்லலாம். அவர் சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் பெங்களூருவில் இருந்து சென்னைக்கு வந்து, சினிமா கல்லூரியில் படித்த காலத்தில் பலருடைய கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளானார். நிறம் இல்லை, நடனம் தெரியாது, ஃபைட் தெரியாது என்று பலரும் ரஜினியின் ஆர்வத்தை குறைத்தனர். ஆனாலும், அவர் தன்னால் திரையில் நடிகனாக மாறமுடியும் என்று ஆழமாக நம்பினார். அந்த நம்பிக்கையினால் பல தடவை படையெடுத்து, இயக்குனர் கே.பாலசந்தர் மூலம் சினிமாவில் அறிமுகம் ஆகிவிட்டார். தொடர்ந்து பாலசந்தர் படங்களில் வில்லனாக நடிக்கத் தொடங்கியவருக்கு, பாரதிராஜாவின் 16 வயதினிலே ஒரு மாபெரும் திருப்புமுனை திரைப்படமாக அமைந்தது.

ரஜினிகாந்த் புதுமையாக நடிக்கிறார் என்று பெயர் பெற்றுத்தந்ததுடன் இல்லாமல், தமிழகம் முழுக்கவே, ‘இது எப்படி இருக்கு..?’ என்ற பஞ்ச் டயலாக் பயங்கர ஃபேமஸ் ஆனது. அந்த நேரத்தில் ரஜினிக்கு, நடிக்க வந்ததை சாதித்துவிட்ட ஒரு திருப்தி கிடைத்தது.

அந்த காலகட்டத்தில் ஒரு சினிமா ஹீரோவாக மாற வேண்டும், சூப்பர் ஸ்டாராக நிலைக்க வேண்டும் என்ற ஆசை, லட்சியம் எல்லாம் ரஜினியிடம் இல்லை. இதேபோல் தொடர்ந்து சின்னச்சின்ன வேடங்கள், குணச்சித்திரம், வில்லன் வேடங்கள் கிடைத்தாலே போதும் என்ற மனநிலையில்தான் இருந்தார். ஏனென்றால் அப்போது விஜயகுமார், சிவகுமார், கமல்ஹாசன் போன்ற அழகான கதாநாயகன்கள் திரையில் மின்னிக்கொண்டு இருந்தனர்.

ஆனால், அவர்களை எல்லாம் ஜெயித்து எப்படி சூப்பர் ஸ்டார் ஆனார் தெரியுமா.?

அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவமே அவரை சூப்பர்ஸ்டாராக மாற்றியது. ஆம், அது குறித்து ரஜினிகாந்த் பல மேடைகளில் வெளிப்படையாகப் பேசி இருக்கிறார்.

16 வயதினிலே படம் பார்த்துவிட்டு, அன்று தமிழகத்தின் முன்னணி தயாரிப்பாளர் ஒருவர் ரஜினியை தனது அடுத்த படத்தில் புக் செய்தார். ரஜினியும் சந்தோஷமாக அந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டார். அட்வான்ஸ் தருவதாகச் சொன்ன தயாரிப்பாளர், அதனை தராமல் இழுத்தடித்தார். ஆனாலும், சூட்டிங் வரச்சொல்லிவிட்டார்கள். மேக்கப் போடுவதற்கு முன்பு அட்வான்ஸ் தரப்படும் என்று உறுதியும் கொடுத்தார்கள்.

ஆகவே, ரஜினியும் மிகுந்த நம்பிக்கையுடன் ஏ.வி.எம். ஸ்டுடியோவுக்குப் போய்விட்டார். ஆனால், அங்கே அட்வான்ஸ் கொடுக்கப்படவில்லை. அட்வான்ஸ் பற்றி எதுவும் பேசாமல், அவரை மேக்கப் போட்டுக்கொள்ளுமாறு கூறினார்கள். அப்போது அட்வான்ஸ் கொடுத்தால்தான் மேக்கப் போடுவேன் என்று கூறியிருக்கிறார் ரஜினி.

உடனே, ‘அடம் பிடிக்காமல் மேக்கப் போடுங்கள். சூட்டிங் ஆரம்பமாகப் போகிறது, கதாநாயகன் வந்துவிட்டார். உங்களால் சூட்டிங் தாமதம் என்றால் தயாரிப்பாளர் கோபமாகிவிடுவார்’ என்று பயமுறுத்தினார்கள். ஆனால், அட்வான்ஸ் தரவில்லை என்றால் மேக்கப் போட மாட்டேன்

அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவமே அவரை சூப்பர்ஸ்டாராக மாற்றியது. ஆம், அது குறித்து ரஜினிகாந்த் பல மேடை களில் வெளிப் படையாகப் பேசி இருக்கிறார்.




என்பதில் ரஜினி உறுதியாக இருந்தார்.

ரஜினி மேக்கப் போட சம்மதிக்கவில்லை என்று தெரிந்ததும், உடனே எங்கிருந்தோ வெள்ளை அம்பாடர் காரில் வந்து பந்தாவாக இறங்கினார் அந்த தயாரிப்பாளர். அன்றைய தினத்தில் வெள்ளை அம்பாசிடர் வைத்திருப்பது என்பது மிகபெரிய கௌரவமாக கருதப்பட்டது. அந்த பெரிய தயாரிப்பாளரை நேரில் பார்த்ததும் ரஜினியே கொஞ்சம் ஆடிப்போய்விட்டார்.

அந்த தயாரிப்பாளர் கடும் கோபத்துடன் ரஜினியிடம் வந்து, ‘ஒரு படம் நடிச்சி ஹிட் ஆனதும், பெரிய நடிகராயிட்டோம்னு நினைக்கிறியா... உனக்கு என் படத்துல வாய்ப்பு கிடையாது, வெளியே போடா.. உன்னால சினிமாவுல என்ன செய்ய முடியும்னு நானும் பார்க்கிறேன்’ என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்.

உடனே ரஜினிகாந்த் அந்த பட வாய்ப்பை விடுவதற்கு மனமின்றி, ‘நீங்கள் இன்று அட்வான்ஸ் தருவதாகச் சொன்னதால்தான் கேட்டேன்...’ என்று கேட்ட பிறகும், தயாரிப்பாளர் மனம் மாறவில்லை. வேறு ஒருவருக்கு மேக்கப் போட்டு படப்பிடிப்பை தொடங்கிவிட்டார்.

சோர்ந்த முகத்துடன் திரும்பினார் ரஜினி. அட்வான்ஸ் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், பையில் ஒரு ரூபாய்கூட



இல்லாமல் அன்று சூட்டிங் வந்திருந்தார் ரஜினி. முகம் முழுக்க அவமானம், கோபம், ஆத்திரத்துடன் ஏ.வி.எம். ஸ்டுடியோவில் இருந்து ரஜினி நடந்தே வெளியேறினார். ரோட்டில் அவர் நடந்தபோது, சுற்றியுள்ள எல்லோருமே அவரை கேலி செய்வது போலவே உணர்ந்திருக்கிறார்.

வேறு ஒருவராக இருந்திருந்தால், அந்த தயாரிப்பாளர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு, அந்த படத்தில் நடித்திருப்பார்கள். அவரால் சினிமா எதிர்காலம் அழிந்துவிட்டது என்று பயந்திருப்பார்கள்.

ஆனால், ரஜினி அன்றைய தினம் அவருடைய ஆழ்மனதில் ஒரு உறுதி எடுத்துக்கொண்டார். இதே ஏ.வி.எம். ஸ்டுடியோவில், அந்த தயாரிப்பாளரின் காரைவிட காஸ்ட்லியான காரில் வந்து இறங்கும் ஒரு பெரிய நடிகராக வேண்டும். இதே இடத்தில், அந்த தயாரிப்பாளர் கார் நிற்கும் இடத்தில் என் கார் நிற்க வேண்டும் என்று மனதிற்குள் உறுதி எடுத்துக்கொண்டார்.

மனதிற்குள் எடுத்துக்கொண்டு உறுதியை ஒவ்வொரு நாளும் நினைத்துக்கொண்டார். அதனை நிறைவேற்றுவதற்காக, தேடி வந்த எல்லா படங்களிலும் சம்பளத்தைப் பற்றி கவலையே படாமல், கொடுத்த தொகையை வாங்கிக்கொண்டு நடிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு படத்திலும் தன்னுடைய முழு திறமையையும் புதிய கோணத்தில் காட்டி நடிக்கத் தொடங்கினார். அவரது மனம் முழுக்கவே, எப்படி மாறுபட்ட வகையில், புதுப்புது ஸ்டைலில் நடிப்பது எப்படி என்பது மட்டுமே சிந்தனையாக இருந்தது. ஆகவே, மூன்றே ஆண்டில் ஒரு மிகப்பெரிய நடிகர் என்ற நிலைக்கு வந்ததுடன், கையிலும் பணம் சேர்ந்தது.

ஏ.வி.எம். நிறுவனத்தார் பயன்படுத்திவந்த வெளிநாட்டுக் கார் விற்பனைக்கு வருவது அறிந்ததும், உடனே அந்த காரை வாங்கினார். வெளிநாட்டு காருக்கு ஒரு வெளிநாட்டுக்காரரை டிரைவராக நியமிக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். பலத்த தேடுதலுக்குப் பிறகு, பாண்டிச்சேரியில் இருந்து ஒரு ஆங்கிலோ இந்தியன் கிடைக்கவே, அவரை டிரைவராக நியமனம் செய்தார்.

எந்த ஏ.வி.எம். ஃபுளோரில் அவமானப்படுத்தி வெளியே அனுப்பப்பட்டாரோ, அதே ஃபுளோரில் வெளிநாட்டுக் காரில் போய் இறங்கினார். வெளிநாட்டு 555 சிகரட் குடித்தபடி, அந்த இடத்திலேயே நின்று, அன்று நடந்த பழைய சம்பவத்தை நினைத்துப் பார்த்து சிரித்திருக்கிறார்.

ஒரே ஒரு அவமானம் தன்னை இந்த அளவுக்கு உயர்த்தியிருக் கிறது என்பதை உணர்ந்தார். அப்போதே, தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத நடிகராக மாற வேண்டும் என்ற அடுத்த உறுதி யை மனதில் எடுத்துக்கொண்டார். அதன்படியே இன்றும் தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத சூப்பர்ஸ்டாராகத் திகழ்கிறார்.

கமல்ஹாசன், விஜயகாந்த், விக்ரம், அஜித், விஜய் என்று எத்தனையோ நடிகர்கள் அந்த பதவிக்குப் போட்டியிட்டாலும், ரஜினியே இன்றும் என்றும் சூப்பர் ஸ்டார்.

இன்று ரஜினிகாந்த் சூப்பர்ஸ்டார் என்றாலும், அவரும் ஒரு காலத்தில் ஒரு சாதாரண மனிதரே. அவருக்கு வெற்றி கொடுத்த ஆழ்மனது, எல்லோருக்கும் வெற்றியையும் சந்தோஷத்தையும் கொடுக்கவே செய்யும். ஆனால், அவரை போன்று திடமான மனதுடன் உழைக்கவும், காத்திருக்கவும் வேண்டும்.

கணவனின் மனதை கவர வேண்டும் என்பதற்காக விஷப்பாம்பை கையில் பிடித்த பெண்ணின் கதை தெரியுமா..?

**- அடுத்த இதழில்...**

## மந்திரச் சொல்

எடை போடும் போது எல்லோரிடமும் குறை தென்படும் புரிந்து கொள்ளும் போது, எல்லோரிடமும் நிறை தென்படும்.



Regain your confident smile with **Full mouth Dental Implants** at

# Rajan Dental

RAJAN
Dental

- Laser
- Braces
- Implants
- Root cancal
- Teeth Replacement
- Bleaching
- General Dentistry
- Cosmetic Dentistry
- AI based diagnostics



For appointments

**Rajan Dental,**
56, Dr.Radhakrishnan Salai,
Myalapore, Chennai 600 004.
Ph: 044 40105050 +91 96000 70003
www.rajandental.com
facebook.com/RajanDental